பக்கங்கள்: 12

# காலைக்கதிர்
Kalaikkathir

விடியல் 08 வள்ளுவர் ஆண்டு 2055 வைகாசி 27 திங்கட்கிழமை 10.06.2024 கதிர் 215

# தமிழ் பொது வேட்பாளரை எதிர்ப்போம் அது தமிழர் இருப்பையே அழித்துவிடும்

## சுமந்திரன் எம்.பி. பகிரங்கமாக அறிவிப்பு

தமிழ் மக்கள் சமஷ்டி அடிப்படையிலான அதிகாரப் பகிர்வுக்கு உரித்தானவர்கள் என்பது திரும்பத் திரும்பத் சொல்லியாகிவிட்டது. அவ்வாறு இருக்கின்ற நிலையில் தமிழ் பொது வேட்பாளரை நிறுத்தி நாங்களொரு விசப் பரீட்சையில் ஈடுபட்டு தமிழ் மக்களின் ஆணையை சமஷ்டிக்கானது இல்லை என்று நிறுவுவதற்கு முயற்சி செய்கின்றோமா என்கின்ற கேள்வி உள்ளது.

எமது மக்களின் அடிப்படையை விலைபேசி விற்கின்ற இந்தச் செயற்பாட்டிற்கு நாம் இறுதிவரை இணங்கப்போவதில்லை. தமிழ் பொதுவேட்பாளர் என்று ஒருவரை நிறுத்தினால் அதற்கு எதிராக நாங்கள் பிரசாரம் செய்ய வேண்டும்.

இவ்வாறு இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் யாழ்.மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் ஜனாதிபதி சட்டத்தரணி சுமந்திரன் தெரிவித்தார்.

தந்தை செல்வா கேட்போர் கூடத்தில் நேற்று நடைபெற்ற ஈழத்தமிழர் சுயநிர்ணய உரிமை: பொதுநிலைப்பாடும், பொதுவாக்கெடுப்பும் என்ற தலைப்பிலான மக்கள் மன்றில் உரையாற்றும்போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் தெரிவித்ததாவது:

2



## மோடி நேற்றுப் பதவியேற்றார் நிகழ்வில் ரணிலுக்கு சிறப்பிடம்

இந்தியாவின் பிரதமராக நரேந்திர மோடி தொடர்ந்து 3ஆவது முறையாகவும் நேற்றுப் பதவியேற்றார். அவருக்கு ஜனாதிபதி திரவுபதி முர்மு பதவியேற்பு உறுதிமொழியைச் செய்து வைத்தார்.

நடந்து முடிந்த லோக்சபா தேர்தலில் மோடி தலைமையிலான தேசிய ஜனநாயக கூட்டணி வெற்றி பெற்று மீண்டும் ஆட்சியை பிடித்துள்ளது. இதையடுத்து நேற்று மாலை 7.15 மணியளவில் ஜனாதிபதி மாளிகையில் நடந்த நிகழ்ச்சியில் மோடி மூன்றாவது முறையாக பிரதமராக பதவியேற்றார்.

இந்தப் பதவியேற்பு நிகழ்வில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவும் கலந்துகொண்டார். பதவியேற்பின் பின்னர் ஏனைய நாட்டுத்

2

## 2025 வரவு செலவுத் திட்டத்திற்கு பதிலாக குறைநிரப்புப் பிரேரணை

ஜனாதிபதித் தேர்தல் உள்ளிட்ட தேர்தல்கள் ஆண்டிறுதியில் எதிர்பார்க்கப்படுவதால் 2025ஆம் ஆண்டுக்கான வரவு - செலவுத் திட்ட அறிக்கையை சமர்ப்பிக்கப் போவதில்லை என்றும் அதற்குப் பதிலாக குறைநிரப்பு பிரேரணை முன்வைக்கவுள்ளதாகவும் நிதி இராஜாங்க அமைச்சர் ரஞ்சித் சியம்பலாபிட்டிய தெரிவித்தார்.

ருவன்வெல்ல பிரதேசத்தில் நேற்று ஊடகங்களுக்கு கருத்து வெளியிடும்பேதே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் தெரிவிக்கையில்,

இவ்வருடம் தேர்தல்கள் இடம்பெறும் வருடமாகும். அதனை அடிப்படையாகக் கொண்டே வரவு - செலவு திட்டத்துக்கு பதிலாக குறை நிரப்பு பிரேரணையை சமர்ப்பிக்க எதிர்பார்க்கப்படுகிறது.

இதற்கு முன்னரும் இவ்வாறான சந்தர்ப்பங்களில் குறை நிரப்பு பிரேரணை சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

2024ஆம் ஆண்டுக்கான வரவு செலவு அறிக்கையின்படி, 2024 டிசம்பர் 31ஆம் திகதி வரை மட்டுமே வருவாய் செலவினங்களைச் செய்வதற்கு பாராளுமன்றத்தின் ஒப்புதல் பெறப்பட்டுள்ளது. அதன்படி, 2025ஆம் ஆண்டுக்கான வரவு, செலவுகளுக்கு ஒப்புதல் பெறப்பட வேண்டும்.

எவ்வாறாயினும், இந்த வருடம் ஜனாதிபதித் தேர்தல் நடைபெறவுள்ளதால், ஒவ்வொரு வேட்பாளரின் கொள்கைப் பிரகடனங்களும் மிக முக்கியமானவையாகும்.

எனவே, அவற்றுக்கு இடமளித்து 2025 முதல் காலாண்டுக்கான நிதி நிர்வாகத்துக்காக குறை நிரப்பு பிரேரணை சமர்ப்பிக்கப்படும்.

ஜனாதிபதித் தேர்தல் நெருங்கிவரும் நிலையில்,

2

## இது ரகசியம் அல்ல!

வடக்கே வந்துள்ள எதிர்க் கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச இன்று தமிழ் அரசுக் கட்சியின் தலைவர்களைக் கட்சியின் மார்ட்டின் வீதி தலைமை அலுவலகத்தில் சந்தித்துக் கலந்துரையாட உள்ளார்.

பாடசாலைகளுக்கு ஸ்மார்ட் வகுப்பறை உபகரணங்களை வழங்கு வதற்காக சஜித் வடக்கே வந்திருந்தாலும், ஜனாதிபதித் தேர்தலுக்கான ஒரு முன்னோடிப் பரப்புரைப் பயணம்

இது என்பது வெளிப் படையானது.

அதையொட்டியே கிளிநொச்சியில் நேற்று உரையாற்றும்போது அரசமைப்பின் 13ஆவது திருத்தத்தை நடைமுறைப்படுத்துவேன என்று தமிழ் மக்களுக்கு அவர் உறுதிமொழி வழங்கினார். அதே உறுதிமொழியைத் தான் மே 1 தொழிலாளர்

2

## வெற்றிபெறமுடியாது என்றானால் ரணில் தேர்தலை ஒத்திவைப்பார்

### உதயங்க கருத்து

ஜனாதிபதித் தேர்தலில் ஸ்ரீலங்கா பொது ஜன பெரமுன நிச்சயமாக தனி வேட்பாளரை முன்வைக்கும். ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தன்னால் வெற்றிபெற முடியாது என கருதினால் ஜனாதிபதி தேர்தலை கட்டாயமாக ஒத்திவைப்பார் என ரஷ்யாவுக்கான இலங்கையின் முன்னாள் தூதுவர் உதயங்க வீரதுங்க தெரிவித்துள்ளார்.

சமூக ஊடகமொன்றுக்கு அவர் வழங்கிய பேட்டியில் மேலும் தெரிவித்துள்ளதாவது, நவம்பர் மாதத்தில் ரஷ்ய சுற்றுலாப் பயணிகளுக்கு சிறப்பு விமானங்கள் ஏற்பாடு செய்யப்படுமா இல்லையா என்பது இன்னும் முடிவு செய்யப்படவில்லை, இதுபோன்ற சூழ்நிலையில், நாட்டில் கடுமையான குழப்பம் ஏற்படலாம்.

ஜனாதிபதித் தேர்தலுக்கு முன்னர் ஜனாதிபதி ரணில் பொதுத் தேர்தலை நடத்துவார் என்று கூறும் முன்னாள் முன்னாள் ஜனாதிபதிகளின் உறவினரான உதயங்க வீரதுங்க, ஜனாதிபதித் தேர்தலை ஒத்திவைப்பது தொடர்பில் ஜனாதிபதி விக்கிரமசிங்கவுக்கு மேற்குலக நாடுகளிலிருந்து எவ்வித ஆட்சேபனையும் இல்லை எனவும் குறிப்பிட்டுள்ளார்.

'தீர்க்க முடியாத பிரச்சினை' காரணமாக ஜனாதிபதித் தேர்தல் ஒத்திவைக்கப்படுவது தொடர்பில் இலங்கையின் சட்டத்தை அமுல்படுத்தும் முகவர் போன்ற 'சில நிறுவனங்கள் மற்றும் தனிநபர்களிடமிருந்து' எந்த ஆட்சேபனையும் இருக்காது எனவும் அவர் கருத்துத் தெரிவித்துள்ளார்..

ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிட மொட்டுக் கட்சியலிருந்து இரண்டு வேட்பாளர்கள் உள்ளனர். மக்கள் ராஜபக்ஷக்களை விரும்பாவிட்டால் நாமல் ராஜபக்ஷவுக்கு பதிலாக தம்மிக்க பெரேராவே பொருத்தமானவர் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

## முன்னாள் பொலிஸ் உயர் அதிகாரிகள் 11 பேர் தேசிய மக்கள் சக்திக்கு ஆதரவு

ஓய்வு பெற்ற சிரேஷ்ட பொலிஸ்மா அதிபர்கள் உள்ளிட்ட 11 சிரேஷ்ட பொலிஸ்மா அதிபர்கள் தேசிய மக்கள் சக்திக்கு ஆதரவு தெரிவித்துள்ளனர்.

மகரகமவில் நேற்று ஓய்வு பெற்ற பொலிஸ் கூட்டமைப்பின் தேசிய மாநாடு நடைபெற்றபோதே அவர்கள் இணைந்து கொண்டனர்.

ரவிசெனவிரட்ன, ஷாணி அபயசேகர, உட்பட ஓய்வு பெற்ற பொலிஸ் அதிகாரிகளும் இதில் கலந்து கொண்டனர்.

ஓய்வு பெற்ற சிரேஷ் பிரதிப் பொலிஸ்மா அதிபர் ரவிசெனவிரட்ன உரையாற்றுகையில் தெரிவித்ததாவது:

பல்வேறு தரப்பினரிடத்திலிருந்து எமக்கு அழுத்தங்கள் பிரயோகிக்கப்பட்டன. எனக்கு மட்டுமல்ல என்னைப் போன்று என் சகபாடிகளுக்கும் அழுத்தம் பிரயோகிக்கப்பட்டது.

மொனராகலவில் உள்ள உத்தியோகத்தர்களுக்கு நீங்களா மாநாட்டுக்கு ஏற்பாடு செய்கின்றீர்கள், நீங்களா ஆட்களை கூட்டிச் செல்கின்றீர்கள் என்று அச்சுறுத்தல் விடுத்தனர். அவர்களின் அச்சுறுத்தல்களை தாங்க முடியாத கட்டத்தில் அங்கிருந்த அதிகாரியொருவர் பொலிஸ் நிலையில் முறைப்பாடொன்றை பதிவு செய்திருந்தார். அதன் பின்னர் அச்சுறுத்தியவர்கள் மன்னிப்புக் கோரினார்கள்.

அதுமட்டுமன்றி நாட்டின் தேசிய புலனாய்வுப் பிரிவினரிடத்தில் இருந்தே எமக்கு உத்தரவு கிடைத்ததால் அச்சுறுத்தலை விடுத்தோம் என்றனர். நாம் ஓய்வுபெற்ற உத்தியோகத்தர்களை

2

## பல்கலைப் பட்டத்தை பாடையில் கட்டி யாழ்ப்பாணத்தில் நூதனப் போராட்டம்





பல்கலைக்கழக பட்டத்தை பாடையில் கட்டி வேலையில்லா பட்டதாரிகள் யாழ்ப்பாணத்தில் கவனயீர்ப்பு போராட்டமொன்றை முன்னெடுத்தனர்.

வடக்கு மாகாண வேலையில்லா பட்டதாரிகள்

2

### தற்போதைய நிலையை மாற்றும் வகையில்

## அரசியலில் தலையிடு செய்ய ஷானி, ரவி செனிவிரட்ன தயார்

### தேசிய மக்கள் சக்தித் தலைவர் அறிவிப்பு

நாட்டின் தற்போதைய அரசியல் நிலைமைகளை மாற்றுவதற்காக முன்னாள் பொலிஸ் அதிகாரிகளான ரவி செனிவிரட்ன மற்றும் ஷானி அபயசேகர ஆகியோர் தலையீடுகளைச் செய்வதற்குத் தயாராகியுள்ளனர் என்று தேசிய மக்கள் சக்தியின் தலைவர் அநுர குமார திஸாநாயக்க தெரிவித்தார்.

மகரகமவில் நேற்று ஓய்வுபெற்ற பொலிஸ் கூட்டமைப்பின் தேசிய மாநாட்டில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் தெரிவித்ததாவது:

இந்த மாநாட்டுக்குச் செல்லக் கூடாது என்று ரவிசெவிரட்னவுக்கு ஆளும் கட்சியில் மட்டுமல்ல எதிர்க்கட்சியில்

2

## இலங்கை மின்சார சபை சட்டம் ஐ.ம.ச. ஆட்சியில் திருத்தப்படும்

### அஜித் பெரேரா எம்.பி. தெரிவிப்பு

இலங்கை மின்சார சபையின் நிர்வாகத்தை சீரழித்து 12 பங்குகளாக பிரித்து தனியார்மயமாக்க ஆளும் தரப்பு நடவடிக்கை எடுத்துள்ளது. ஐக்கிய மக்கள் சக்தியின் ஆட்சியில் இதனை திருத்தியமைத்து புதிய சட்டம் அறிமுகப்படுத்தப்படும் என்று முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் அஜித் பி. பெரேரா தெரிவித்தார்.

கொழும்பிலுள்ள எதிர்க்கட்சி தலைவர் அலுவலகத்தில் நேற்று செய்தியாளர்களிடம் அவர் இதனைத் தெரிவித்தார். அவர் அங்கு மேலும் தெரிவித்ததாவது:

புதிய மின்சார சட்டம் தொடர்பில் உயர் நீதிமன்றம் சென்று மக்கள் உரிமையை ஐக்கிய மக்கள் சக்தி பாதுகாத்துள்ளது. இலங்கை மின்சார சபையின் நிர்வாகத்தை சீரழித்து 12 பங்குகளாக பிரித்து தனியார்மயமாக்க அரசாங்கம் நடவடிக்கை எடுத்துள்ளது. இச்சட்டத்தின் மூலம் அமைச்சருக்கு குவிக்கப்பட்ட அதிகாரங்களை எமது ஆட்சியில் குறைப்போம்.

மன்னார் மற்றும் பூநகரி ஆகிய பகுதிகளில் நிர்மாணிக்கப்படவுள்ள அதானி நிறுவனத்தின் 'அதானி கிரீன் எனர்ஜி' காற்றாலை மின் உற்பத்தியின் ஊடாக மின்சாரத்தை 20 வருடங்களுக்கு கொள்வனவு செய்வதற்கு அமைச்சரவை

2

## ஐ.ம.ச. ஆட்சியில் 13 நிச்சயம் கிளிநொச்சியில் சஜித் கருத்து

அரசமைப்பின் 13ஆவது திருத்தம் தொடர்பில் பேசுவதற்கே சிலர் அச்சமடைகின்றனர். ஆனால் நான் அதற்கு தயங்குபவன் அல்லன். ஐக்கிய மக்கள் சக்தி ஆட்சியில் 13ஆவது திருத்தம் நிச்சயம் நடைமுறைப்படுத்தப்படும் என்று எதிர்க்கட்சி தலைவர் சஜித் பிரேமதாச உறுதியளித்தார்.

பிரபஞ்சம் தகவல் தொழிநுட்ப செயற்றிட்டத்தின் கீழ் கிளிநொச்சி, பாரதி வித்தியாலயத்துக்கு பாடசாலை உபகரணங்களை வழங்கி வைக்கும் நிகழ்வில் நேற்று கலந்துகொண்டு உரையாற்றும்போதே எதிர்க்கட்சி தலைவர் இவ்வாறு உறுதியளித்தார்.

அங்கு அவர் தொடர்ந்தும் தெரிவித்ததாவது:

பல்வேறு தலைவர்கள் பல்வேறு காலகட்டங்களில் வெவ்வேறுவழிகளில் பொய்களைக் கூறிக் கொண்டிருக்கின்றனர். 13ஆவது அரசமைப்புத் திருத்தம் நடைமுறைப்படுத்தப்படும் என ஐக்கிய மக்கள் சக்தி தொடர்ந்தும் கூறிவருகிறது. சர்வதேச தொழிலாளர் தினத்தன்றும் அந்த உறுதிமொழி வழங்கப்பட்டது.

அரசமைப்பிலுள்ள 13ஆவது திருத்தம் நிச்சயம் அமுல்படுத்தப்படும். வடக்கு, கிழக்கு மாத்திரமின்றி 9 மாகாணங்களிலும் உள்ள மக்களுக்கும் இந்த வாக்குறுதியை வழங்குகிறேன். இதனை நடைமுறைப்படுத்த தயங்கப் போவதில்லை.

இதன் மூலம் இப்பிரதேச மக்களின் அரசியல், மத, சமூக, கலாசார உரிமைகள் பாதுகாக்கப்படும். அடிப்படை உரிமைகள் என்ற அத்தியாயத்தில் அரசியல் மற்றும் சிவில் உரிமைகளே உள்ளடங்கியுள்ளன. ஆனால், ஐக்கிய மக்கள் சக்தி அரசாங்கத்தில் இந்த அத்தியாயத்தை விரிவுபடுத்தி இதில் பொருளாதார, சமூக, மத, சுகாதார, கல்வி உரிமைகள் வழங்கப்படும்.

2

## ரணிலின் தேர்தல் வெற்றிக்காக மகாவலி கங்கைபோல பரப்புரை

### இப்படிச் சொல்கிறார் ஐ.தே.க. செயலர்

ரணில் விக்கிரமசிங்கவின் தேர்தல் வெற்றிக்காக மகாவலி கங்கையின் உற்பத்தி போன்று பல்வேறு வழிகளில் பரப்புரை முன்னெடுக்கப்படுகிறது என்று ஐக்கிய தேசியக் கட்சியின் பொதுச்செயலாளர் பாலித்த ரங்கே பண்டார தெரிவித்தார்.

ஐக்கிய தேசியக் கட்சியின் கெஸ்பேவ தேர்தல் தொகுதிக்கான

2

காலைக்கதிர் Kalaikkathir

## இனி இது .....

தினத்தன்றும் வழங்கினார் என்பதையும் அவர் இந்த உரையில் நினைவுகூர்ந்தார்.

அண்மையில் யாழ்ப்பாணம் வந்திருந்த ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, மே 1 சஜித்தின் உரையை மேற்கோள்காட்டி 13ஆவது திருத்தத்தை அவர் (சஜித்) முழுமையாக நடைமுறைப்படுத்துவதாகச் சொல்லவில்லை, எதற்கும் அதனை அவரிடம் கேட்டு உறுதிப்படுத்திக்கொள்ளுங்கள் என்று வடக்கின் முன்னாள் முதலமைச்சரான நாடாளுமன்ற உறுப்பினர் விக்னேஸ்வரனிடம் தெரிவித்திருந்தார்.

இந்த நிலையில், சஜித்தின் கிளிநொச்சி உரையிலும் 13ஐ அவர் முழுமையாக, அதாவது அரசமைப்பில் குறிப்பிடப்பட்டுள்ளபடி காணி மற்றும் பொலிஸ் அதிகாரங்களுடன் நடைமுறைப்படுத்துவாரா என்பதை உறுதியாக வெளிப்படுத்தவில்லை. எனவே இன்று தமிழ் அரசுக் கட்சியுடன் நடக்கும் சந்திப்பில் அது தொடர்பில் நிச்சயம் விரிவாகப் பேசப்படும் என்று எதிர்பார்க்கலாம்.

பேச்சின் பின்னர் வழக்கம் போல 13ஐ முழுமையாக நடைமுறைப்படுத்துவார் என்று சஜித் சொன்னார் என தமிழ் அரசுக் கட்சியினர் சொல்வதைவிட சஜித்தின் வாயாலேயே அதனைச் சொல்ல வைப்பதே சிறந்தது.

இதற்கிடையில் இன்றைய சந்திப்பில் நாடாளுமன்ற உறுப்பினர் சிறீதரன் கலந்துகொள்ள மாட்டார் என்று கட்சி வட்டாரங்கள் தெரிவித்தன. அவர் ஏற்கனவே, ஜனாதிபதித் தேர்தலில் தமிழ் பொது வேட்பாளருக்கு ஆதரவு தெரிவித்து வருகின்றார் என்பதால், சஜித்துடனான சந்திப்பிற்கு அவர் வருகை தர மாட்டார் என்று கூறப்பட்டது.

......................

தமிழ் பொது வேட்பாளரை எதிர்த்து, அந்த முயற்சியைத் தோற்கடிக்கும் வகையில் பரப்புரை செய்வோம் என்று தமிழ் அரசுக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் சுமந்திரன் தெரிவித்துவிட்டார். கட்சித் தலைவர் மாவை சேனாதிராசாவை முன்னால் வைத்துக்கொண்டுதான் அவர் இதனைத் தெரிவித்தார். ஆக மொத்தத்தில் தமிழ் அரசுக் கட்சியின் ஒரு பகுதியினராவது தமிழ் பொது வேட்பாளருக்கு எதிராகத் தீவிரமாகப் பிளவுபட்டு நிற்பார்கள் என்பது உறுதியாகிவிட்டது.

ஏற்கனவே தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியும் ஜனாதிபதித் தேர்தல் புறக்கணிப்புத் தவிர்ந்த வேறு எந்த யோசனையையும் பரிசீலிப்பதற்குத் தயாரில்லை என்று அறிவித்துவிட்டது. ஆக மொத்தத்தில் தமிழர்களின் ஒற்றுமைக்காக, தமிழ்த் தேசியத்தின் கட்டுமானத்துக்காக என்று தமிழ் குடிமக்கள் அமைப்புக்கள் சிலவற்றால் தொடங்கப்பட்ட தமிழ் பொது வேட்பாளர் என்கிற முயற்சி தமிழர்களை ஜனாதிபதித் தேர்தலில் நான்கு பிரதான பிரிவுகளாகப் பிரித்துள்ளது. ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவை ஆதரிக்கும் ஒரு தரப்பு, தமிழ் பொது வேட்பாளரை ஆதரிக்கும் ஒரு தரப்பு, அதனை எதிர்க்கும் ஒரு தரப்பு, தேர்தல் புறக்கணிப்பைக் கோரும் ஒரு தரப்பு என்று 4 தரப்புக்கள் தேர்தலில் களம் காணும். இதில் பொது வேட்பாளர் தரப்பை ஒரு தரப்பு மட்டுமே ஆதரிக்கும்.

தமிழ் பொது வேட்பாளரை நிறுத்துவதன் மூலம் தமிழ் மக்களின் பேரம் பேசும் சக்தியை அதிகரிக்க முடியும் ஜனாதிபதி வேட்பாளர்களைத் தமிழர்களை நோக்கி வரமுடியும் என்றெல்லாம் விளக்கம் கொடுத்து வந்த ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டணியின் தலைவர்களை, வடக்கே வந்திருக்கும் சஜித் பிரேமதாச சந்தித்துப் பேசுகிறாரா என்பதைப் பொறுத்திருந்த பார்த்தால் தெரிந்துவிடும் அவர்களின் (தமிழ் தலைவரிகளின்) பேரம் பேசும் சக்தி அதிகரித்திருக்கின்றதா இல்லை படுத்தே விட்டதா என்கிற விடயம்.

இடிமின்னல்

## தமிழ்பொது....

பொதுவாக்கெடுப்பு தொடர்பாக இலங்கை தமிழ் அரசுக் கட்சியின் வெள்ளிவிழா மலரில் (1951 ஆம் ஆண்டு வெளியிடப்பட்டது) மிகத் தெளிவாகச் சொல்லப்பட்டிருக்கின்றது. அதில் தமிழ் மக்களின் தாயகத்தின் எல்லை பகுதிகளை நிர்ணயிப்பதற்காகவே பொதுவாக்கெடுப்பு தேவை என்று சொல்லப்பட்டிருக்கிறது. இதனையடுத்து நடைபெற்ற பொதுத்தேர்தலில் இலங்கை தமிழ் அரசுக் கட்சிக்கு வெற்றி கிடைக்கவில்லை. வடக்கில் ஒருவரும் கிழக்கில் ஒருவரும்தான் வெற்றி பெற்றார்கள். அதேநேரம் 1956ஆம் ஆண்டிலிருந்து தற்போதுவரை நடைபெற்றுள்ள நாட்டின் அனைத்து தேர்தல்களிலும் தமிழ் மக்கள் பங்கேற்று தங்களுடைய வாக்குகளை அளித்திருக்கிறாரகள்.

தமிழ் மக்களைப் பொறுத்தவரையில் சமஷ்டி கோரிக்கைக்குக் குறைவாக எந்தவொரு தருணத்திலும் அவர்கள் வாக்களிக்கவில்லை. அவர்கள் ஒரு தடவை சமஷ்டியைவிட அதிகூடிய கோரிக்கைக்குத் தான் வாக்களித்திருக்கிறார்கள் தமிழ் மக்கள் இலங்கை தீவில் தமக்கென்ற தனியான ஆட்புல எல்லைக்குள் வாழ்கின்ற ஒரு தனித்துவம் மிக்க பேசிய இனம் என்பது உலகத்தில் ஏற்றுக்கொள்ளப்பட்டிருப்பது. கூடவே அவர்கள் சுயநிர்ணய அடிப்படையில் சமஷ்டி முறையிலான அரசியல் தீர்வுக்கு உரித்தானவர்கள் என்பதற்கு மாற்று கருத்துக்களும் வைக்கப்படவில்லை.

தமிழ் மக்கள் சமஷ்டி அடிப்படையிலான அதிகாரப் பகிர்வுக்கு உரித்தானவர்கள் என்பது திரும்பத் திரும்பத் சொல்லியாகிவிட்டது. அவ்வாறு இருக்கின்ற நிலையில் நாங்களொரு விசப் பரீட்சையில் ஈடுபட்டு தமிழ் மக்களின் ஆணையை சமஷ்டிக்கானது இல்லை என்று நிறுவுவதற்கு முயற்சி செய்கின்றோமா என்கின்ற கேள்விகள் உள்ளன.

தமிழ் மக்களின் அரசியல் தலைவர்கள் என்ற அடிப்படையில் அவ்விதமான விசப் பரீட்சைக்கு செல்லவே கூடாது என்பது என்னுடைய ஆணித்தரமான கருத்தாகிறது. நாட்டின் ஜனாதிபதியாக யார் வர வேண்டும் என்பது தொடர்பில் பலருக்கு பல்வேறு விதமான மாறுபட்ட கருத்துக்கள் இருக்கும். அவரவர் தமது கருத்துக்குகேற்ப வாக்களித்துவிட்டு வருவார்கள். அந்தத் தேர்தலில் இன்னொரு செய்தி சொல்லப்படும் என்று கருதி அவர்கள் வாக்களிக்கப்போவதில்லை.

தமிழ் பொது வேட்பாளர் என்பது எம்முடைய இருப்பையே இல்லாமல் செய்கின்றதொரு நிகழ்வு. அதனை விசப்பரீட்சை என்றுகூடச்சொல்ல முடியாது. பொதுவேட்பாளர் ஒருவர் நிறுத்தப்பட்டு வாக்களிக்கப்பட்டால் தமிழ் மக்களின் உயிர்மூச்சான சுயநிர்ணய உரிமையையும் இறைமையையும் நாங்களே இல்லை என்று ஒப்புவிக்கின்றதொரு நிகழ்வாகதான் இருக்கும்.

சிவில் சமூகங்களுக்கு கருத்து தெரிவிப்பதற்கு உரிமைகள் உள்ளன. அவர்களுக்கும் சமூகத்தின் மீது கரிசனைகளை செலுத்துவதற்கான உரிமைகள் இருக்கின்றன. ஆனால் தேர்தல் என்பது ஒரு அரசியல் நிகழ்ச்சி. அந்த அரசியல் நிகழ்ச்சியில் மக்களை வழிநடத்துவதற்கு சிவில் சமூகத்தினரை தெரிவு செய்யவில்லை. மக்கள் அரசியல் தலைவர்களையே தெரிவு செய்திருக்கிறார்கள். ஆகவே மக்கள் எங்களுக்கு வழங்கிய அந்த ஆணைக்கு ஏற்ப தீர்மானம் எடுக்கின்ற பொறுப்பு எமக்குத்தான் இருக்கின்றது. அதனை வேறு எவருக்கும் நாங்கள் வழங்கிவிட முடியாது.

அவ்வாறு நாங்கள் பொறுப்பில் இருந்து விலகினால் எமது பொறுப்பை நாங்கள் உதாசீனம் செய்ததாக மாறிவிடும். எமது மக்களின் தலைவிதியை நிர்ணயம் செய்கின்ற இந்தப் பொறுப்பற்ற செயலுக்கு அரசியல் தலைவர்களாகவும் மக்கள் ஆணை அளித்தவர்களாகவும் நாங்கள் இடமளிக்க முடியாது. எமது மக்களின் அடிப்படையை விலைபேசி விற்கின்ற இந்தச் செயற்பாட்டிற்கு நாம் இறுதிவரை இணங்கப்போவதில்லை.

தமிழ் பொதுவேட்பாளர் என்று ஒருவரை நிறுத்தினால் அதற்கு எதிராக நாங்கள் பிரசாரம் செய்ய வேண்டும். அப்பொழுதுதான் தமிழ் மக்களினுடைய நிலைப்பாடு தமிழ் பொது வேட்பாளர் அல்ல என்பதை நாங்கள் உறுதியாக வெளிப்படுத்தக்கூடியதாக இருக்கும். அதன் மூலம் தான் யாரோ செய்த கோமாளிக் கூத்துக்கு தமிழ் மக்கள் இடமளிக்கவில்லை என்ற செய்தி சொல்லப்படும். தமிழ் மக்களின் அடிப்படை பாதுகாக்கப்படும். எனக்கு மக்கள் வழங்கியுள்ள ஆணையை மதித்து நான் அந்தச் செயற்பாட்டை முன்னெடுப்பேன். துரோகிப் பட்டம் கட்டிவிடு வார்கள் என்பதற்காக ஓடி ஒழியப் போவதில்லை. இப்போது துரோகிப்பட்டத்துக்கு பெறுமதியற்ற நிலையே உள்ளது - என்றார்.

## மோ டி...

தலைவர்களுடன் எடுத்துக்கொண்ட ஒளிப்படத்தில் மோடிக்கு வலதுபுறத்தில் நெருக்கமாக உடன் அடுத்த இடம் ரணிலுக்கு வழங்கப்பட்டிருந்தது.

முன்னதாக, மோடியின் பதவியேற்பு விழாவில் பங்கேற்பதற்காக ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க இந்திரா காந்தி விமான நிலையத்தின் ஊடாக இந்தியா சென்றடைந்தார்.

இந்திய வெளிவிவகார அமைச்சின் சார்பில் மேலதிக செயலாளர் பி.குமரன், இலங்கைக்கான இந்திய உயர்ஸ்தானிகர் சந்தோஷ் ஜா, இந்து சமுத்திர வலய மேலதிக செயலாளர் புனித் அகர்வால், இந்தியாவுக்கான இலங்கை உயர்ஸ்தானிகர் ஷெனுகா செனவிரத்ன ஆகியோர் ஜனாதிபதிக்கு விமான நிலையத்தில் மகத்தான வரவேற்பளித்ததோடு இந்திய கலாச்சாரத்தை பிரதிபலிக்கும் நடன நிகழ்ச்சியும் அவருக்காக இடம்பெற்றது.

ஜனாதிபதிரணில் விக்ரமசிங்கவின் வருகை குறித்து இந்திய ஊடகங்கள் சிறப்பிடம் வழங்கியிருந்தன. தலைநகர் புதுடில்லியின் பிரதான சுற்றுவட்டங்களைச் சுற்றி இலங்கை ஜனாதிபதி மற்றும் பிரதமர் மோடியின் படங்கள் அடங்கிய பதாதைகள் காட்சிப்படுத்தப்பட்டிருந்தன.

மத்திய அமைச்சர்கள் பதவியேற்பு

பிரதமராக மோடி பதவியேற்றதை தொடர்ந்து இரண்டாவது நபராக ராஜ்நாத்சிங் பதவியேற்றார். இவர்களை தொடர்ந்து அமித்ஷா, நிதின்கட்கரி, ஜெ.பி.நட்டா, சிவராஜ்சிங் சவுகான், நிர்மலா சீதாராமன், ஜெய்சங்கர் , மனோகர் லால் கட்டார், குமாரசாமி, பியூஸ் கோயல், தர்மேந்திர பிரதான் ஜித்தன்ராம் மாஞ்சி, லாலன்சிங், சர்பானந்த சோனேவால், வீரேந்திர குமார், ராம் மோகன் நாயுடு, பிரகலாத் ஜோஷி, ஜுவல் ஓரம், கிரிராஜ்சிங், அஸ்வினி வைஷ்ணவ், ஜோதிர் ஆதித்ய சிந்தியா, கஜேந்திர சிங் செகாவத், அன்னபூர்ணா தேவி, கிரண்ரிஜிஜு, ஹர்தீப் சிங்பூரி மன்சுக் மாண்டவியா, கிஷன்ரெட்டி, சிராக்பஸ்வான், சி.ஆர். பாட்டீல், ராவ் இந்தர்ஜித்சிங் ஆகியோர் உள்ளிட்ட 72 பேர் அமைச்சர்களாகப் பதவியேற்றனர். இவர்களல் 36 பேர் அமைச்சரவை அமைச்சர்கள். மேலும் 36 பேர் இணை அமைச்சர்கள்.

சிவராஜ்சிங் சவுகான், ராஜ்நாத்சிங், குமாரசாமி, மனோகர்லால் கட்டார், சர்பானந்தா சோனாவால், ஜித்தன்ராம் மஞ்சி ஆகிய 6 முன்னாள் முதல்வர்கள் பிரதமர் மோடி தலைமையிலான அமைச்சரவையில் இடம்பெற்றுள்ளனர்.

பிரதமர் பதவியேற்பு நிகழ்ச்சியில் வங்கதேச பிரதமர் ஷேக் ஹசீனா, மாலைதீவு அதிபர் முகமது முய்சு, நேபாள பிரதமர் புஷ்ப கமல் தஹால், இலங்கை ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க, மொரீஷியஸ் பிரதமர் பிரவிந்த் ஜக்நாத், செஷல்ஸ் அதிபர் வேவல் ராம்கலவன், பூடான் பிரதமர் ஷெரீன் டோப்கே ஆகிய நாடுகளின் தலைவர்கள். மோடி பதவியேற்பு விழாவில் பங்கேற்றனர். காங்கிரஸ் தலைவர் கார்கேவும் இந்த விழாவில் பங்கேற்றார். பல்வேறு நாட்டு தூதர்கள் ஜனாதிபதி மாளிகையில் நடைபெற்ற பிபதவியேற்பு விழாவில் பங்கேற்றனர்.

பொலிவுட் நடிகர் ஷாஷரூக்கான், அக்சய்குமார், தெலுங்கு நடிகர் நாகேந்திரபாபு, நடிகர் ரஜினிகாந்த் மற்றும் அவரது மனைவி லதா உள்ளிட்டோரும் நிகழ்வில் கலந்துகொண்டனர். புதுச்சேரி மற்றும் ஜார்க்கண்ட் ஆளுநர் சி.பி. ராதாகிருஷ்ணன், கேரள ஆளுநர் ஆரிப்கான் பங்கேற்னர். பதவியேற்பு விழாவையொட்டி டில்லியில் பிரமாண்ட ஏற்பாடுகள் செய்யப்பட்டுஇருந்தன. பதவியேற்பு விழாவில் 8000க்கும் அதிகமான அழைப்பாளர்கள் கலந்து கொண்டனர்

## அரசியலில்...

இருந்தும் அழுத்தங்கள் பிரயோகிக்கப்பட்டன என்பதை நான் அறிவேன்.

ரவிசெனவிரத்ன சிரேஷ்ட பொலிஸ் உத்தியோகத்தர். ஷானி அபயசேகர குற்றப்புலனாய்வு திணைக்களத்தில் இருந்த முக்கிய உத்தியோகத்தர். அவர்கள் இருவரும் இந்த மேடையில் ஏறியுள்ளனர். அச்சுறுத்தல்களுக்கு அடிபணியவில்லை. அவர்கள் நடந்தது என்னவென்று நாட்டு மக்களுக்கு கூறியுள்ளனர்.

அதுமட்டுமன்றி நாட்டில் தற்போதைய நிலைமைகளை மாற்றுவதற்காக செயற்படுவதற்கும் தலையீடுகளைச் செய்வதற்கும் தீர்மானித்துள்ளனர். ஆகவே பொலிஸாருக்கு தற்போது வழங்கப்பட்டுள்ள அதிகாரங்கள் குறைவாக இருந்தால் அதனை மேலும் வலுவூட்டி நாட்டில் சட்டம் ஒழுங்கை நடைமுறைப்படுத்துவதற்கு நாம் துணையாக இருப்போம் என்றார்.

## பல்கலை....

சங்கத்தின் ஏற்பாட்டில் நேற்று யாழ். மாவட்டச் செயலகத்திற்கு முன்னால் இந்த கவனயீர்ப்பு போராட்டம் மேற்கொள்ளப்பட்டது.

பட்டம் வீட்டில் பட்டதாரிகள் நடு ரோட்டில், ஒரே ஒரு பரீட்சையில் பறந்து போனது பல பரீட்சை எழுதிப் பெற்ற பட்டம், வேண்டும் வேண்டும் நீதி வேண்டும், எமக்கான வாழ்க்கையை நாம் எப்போது வாழ்வது, படிப்பிற்க்கும் போராட்டம் வேலைக்கும் போராடுவதா, எல்லோருக்கும் பாரபட்சமின்றி வேலைகளை வழங்க வேண்டும், படித்ததக்கு கூலிதொழிலா கடைசி வரைக்கும், படித்தவர்கள் இந்த நாட்டின் சாபக்கேடுகளா?, பல வருட கனவு வெறும் கனவாகவே போய்விடுமா?, படித்தும் பரதேசிகளாக திரிவதா? என கோஷங்கள் எழுப்பப்பட்டுடன் அனைத்து பட்டதாரிகளுக்கும் பாரபட்சமின்றி வேலை வாய்ப்பை வழங்க வேண்டுமென வலியுறுத்தி போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

மேலும் தமது கோரிக்கைகளை ஆளும் தரப்பு விரைந்து நிறைவேற்ற வேண்டுமென்றும் இல்லையேல் தொடர்ந்து தாம் பாரிய போராட்டங்களை நடாத்தவுள்ளதாகவும் தெரிவித்தனர்.

## முன்னாள்...

ஒன்றிணைத்து இந்தக் கட்டமைப்பை உருவாக்குவதற்குக் காரணம், நாட்டில் சட்டம் ஒழுங்கை காப்பாற்றுவதற்காகவே ஆகும்.

பொலிஸ், சட்டமா அதிபர் திணைக்களம், நீதிமன்றம் ஆகிய மூன்று கட்டமைப்புக்களும் சுயாதீனமாகச் செயற்பட்டால் இந்த நாட்டில் சட்டத்தினை மதிக்கும் நிலைமைகள் இயல்பாகவே உருவாகும்.

காலி முகத்திடலில் இளைஞர்கள் தொடர்ச்சியாகப் போராட்டத்தில் ஈடுபட்டனர். அவர்களை அரச ஒத்துழைப்புடன் சென்ற குழுவினர் தாக்கி விரட்டியடித்தனர். பொலிஸ் உத்தியோகத்தர்கள் பார்த்துக்கொண்டிருக்கும்போதே அது நிகழ்ந்தது.

பொலிஸார் தமக்கு வழங்கப்பட்ட அதிகாரத்தினைப் பிரயோகிக்கவில்லை. ஆனால் அந்த பொலிஸ் அதிகாரிகள் இன்னமும் பதவிநிலைகளில் உள்ளனர். இதுவா சட்டத்தினை மதிக்கும் சமூகத்தில் நடைபெறவேண்டும்.

2015 ஜனவரி 8ஆம் திகதி ஜனாதிபதி தேர்தல் பெறுபேறுகள் அறிவிக்கப்பட்டிருந்தன. அன்றையதினம் பொலிஸ் அதிகாரிகள் அலரிமாளிகைக்குச் செல்கின்றனர். தேர்தல் முடிவுகளை அறிவிக்கும் செயற்பாடு தற்காலிகமாக நிறுத்தப்படுகின்றது. அந்த தருணத்தில் அலரிமாளிகையில் நடைபெற்ற கூட்டத்தில் நாட்டில் அவசரகால நிலைமை உள்ளதாக கருதி அவசரகாலச் சட்டத்தினை பிரகடனப்படுத்துவதற்குத் தீர்மானிக்கப்பட்டது.

பொலிஸ் மா அதிபராக அப்போது இளங்ககோன் இருந்தார். அவர் அந்த இடத்தில் அவசரகாலச் சட்டத்தினை அமுலாக்க முடியாது என்று கூறினார். அச்சட்டத்தினை அமுலாக்குவதற்கு நாட்டின் அமைதிக்கு குந்தகம் ஏற்படவில்லை என்று சுட்டிக்காட்டினார். அதனால் அந்த விடயம் அப்போதே முடிவுக்கு வந்தது.

அதன் பின்னர் உயிர்த்த ஞாயிறு சம்பவம் நிகழ்ந்தது. அதனை அனைவரும் அறிவீர்கள். உயர்த்த ஞாயிறு தாக்குதல் இடம்பெற்றுள்ளது என்பதை உணரக்கூடியதாக உள்ளது. ஆனால் அதற்கான விசாரணைகள் முறையாக இடம்பெறவில்லை. இந்த மேடையில் உள்ள ஷானி அபயசேகர விசாரணைகளை முன்னெடுத்திருந்தார்.

அதுமட்டுமன்றி குற்றப்புலனாய்வுத் திணைக்களத்தில் இருந்தபோது லசந்தவின் படுகொலை, எக்னெலியகொடவின் காணாமல் போன சம்பவம் தொடர்பில் தனிப்பட்ட முறையில் விசாரணைகளை முன்னெடுத்திருந்தார். அவர் சுயாதீனமாக செயற்பட்டதால் அவர் பழிவாங்கப்பட்டார் என்றார்.

## ரணிலின்...

அலுவலகத்தினை திறந்து வைக்கும் நிகழ்வு நேற்று நடைபெற்ற பின்னர் செய்தியாளர்களிடம் அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

தேர்தல்களில் முக்கியமானது ஜனாதிபதித் தேர்தலாகும். அந்த வகையில் ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் ரணில் விக்கிமசிங்க ஜனாதிபதித்

தேர்தலுக்கு முகங்கொடுப்பதற்குத் தயாராகவே உள்ளார்.

அவருடைய தேர்தல் பரப்புரை இரண்டுவிதமாக முன்னெடுக்கப்படுகின்றது. ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் என்ற வகையில் ஐக்கிய தேசியக் கட்சியின் தலைமையகமான சிறிகொத்தாவில் தேர்தல் பரப்புரைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. அதேநேரம், நாட்டின் சுயாதீன ஜனாதிபதி வேட்பாளர் என்ற அடிப்படையில் அவருடைய தேர்தல் பரப்புரை வேறுதுறையிலிருந்தும் முன்னெடுக்கப்பட்டு வருகின்றது.

சிவனொளிபாத மலையில் இருந்து ஐந்து கிளைகளுடன் உருவாகியுள்ள மகாவலி ஆறுபோன்று பல்வேறு கிளைகளில் தொடங்கப்பட்டுள்ள பரப்புரையானது இறுதியாக ரணில் விக்கிரமசிங்கவின் தேர்தல் வெற்றியுடன் சங்கமிக்கும் என்பதை நான் சுருக்கமாகக் கூறுகின்றேன்' என்றார்.

## ஐ.ம.ச...

13ஆவது திருத்தம் குறித்துப் பேசும்போது பல தலைவர்கள் ஆகாயத்தைப் பார்த்துக்கொண்டு கேட்காதது போல் பாசாங்கு செய்வர். அல்லது அது பற்றிய பேச்சினை உதாசீனப்படுத்துவார்கள். ஒரு சிலர் அது தொடர்பில் பேசுவதற்கு அச்சப்படுகின்றனர். இவ்வாறு பெரும்பாலானோர் சந்தர்ப்பவாதிகளாக நடந்துகொண்டாலும் நாம் இவ்விடயத்தில் நேர்மையாகவே நடந்துகொள்கின்றோம்.

எனவே எவ்வித பேதமும் இன்றி நாட்டை கட்டியெழுப்ப ஒன்றிணையுமாறு அனைவருக்கும் அழைப்பு விடுக்கின்றேன். பல்வேறு அரசியல்வாதிகள் வடக்கிற்கு வந்து அரசின் வளங்களை பகிர்ந்தளித்தாலும், பல்வேறு நன்கொடையாளர்கள் வழங்கிய உதவிகளையே நான் வழங்கி வருகிறேன். எதிர்க்கட்சியில் உள்ள ஏனைய கட்சிகள் பணியாற்றாது இருந்தாலும், நானும் எனது குழுவும் மக்களுக்கு சேவையாற்றி வருகின்றோம்.

இனவாதத்தைப் பரப்பி தமது வாக்குகளை தக்கவைத்துக்கொள்ள முயற்சிக்கும் அரசியல்வாதிகளிடம் மக்கள் அவதானமாக இருக்க வேண்டும். பிள்ளைகளின் எதிர்காலம் குறித்து சிந்திக்காமல் தமது வாக்குகள் குறித்து சிந்திப்பவர்களே இத்தகைய நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றனர். ஆனால், நான் அவ்வாறு செயற்படவில்லை.

வட மாகாணத்திலும் கிளிநொச்சி மாவட்டத்திலும் அபிவிருத்தி நடவடிக்கைகளை நாம் மேற்கொள்வோம். இதுவரையில் நடைமுறைப்படுத்தப்படாத வரலாற்றுச் சிறப்புமிக்க செயற்றிட்டத்தை நடைமுறைப்படுத்திய இந்த எதிர்க்கட்சித் தலைவர், நாட்டின் தலைவரான பின்னர் கிளிநொச்சி மாவட்டத்தை அபிவிருத்தி செய்து தருவேன் என உறுதியளிக்கிறேன்.

இப்பிரதேசத்தில் தனியான கைத்தொழில் பேட்டைகள் மற்றும் தகவல் தொழில்நுட்ப பூங்காக்கள் அமைத்துத் தரப்படும். இந்தியாவில் உள்ள நவீன தகவல் தொழில்நுட்ப கல்வி நிறுவனங்களின் மாதிரியை அடிப்படையாகக் கொண்டு நாட்டிலும் அதுபோன்ற நிறுவனங்களை நிறுவி, சர்வதேச தரத்தில் அமைந்த தகவல் தொழில்நுட்பம் மற்றும் முகாமைத்துவ நிறுவனங்கள் நிறுவப்படும். இதற்கு இந்தியா உள்ளிட்ட நாடுகளின் ஒத்துழைப்பைப் பெற்றுக்கொள்வோம் என்றார்.

## இலங்கை..

இந்த அங்கீகாரத்தை வழங்கியுள்ளது. அதானியிடமிருந்து 32.8டொலருக்கு மின்சாரத்தை கொள்வனவு செய்கின்றனர். இது மக்கள் உரிமையை மீறும் செயலாகும். புதிய மின்சார சட்டத்தின் ஊடாக ஊழல் மேலும் அதிகரிக்கும். ஐக்கிய மக்கள் சக்தியில் ஆட்சியில் இதனை திருத்தியமைத்து புதிய சட்டமொன்றை முன்வைப்போம் என்றார்.

## 2025....

கவர்ச்சிகரமான முன்மொழிவுகளை உள்ளடக்கி அடுத்த ஆண்டுக்கான வரவு செலவுத் திட்ட முன்மொழிவுகளை முன்வைப்பதற்கு அரசாங்கத்திற்கு ஏராளமான வாய்ப்புகள் உள்ளன.

ஆனால் உலகமே ஏற்றுக்கொண்ட ஜனநாயகப் போக்கைப் பின்பற்றி, அரச தலைவர் என்ற வகையில் ஜனாதிபதி தேர்தலை நடத்த தீர்மானித்துள்ளார். அத்துடன், குறித்த குறைநிரப்பு பிரேரணை ஊடாக புதிய திட்டங்கள், யோசனைகள் எவையும் முன்வைக்கப்பட மாட்டாது. அரச ஊழியர்களின் சம்பளம் மற்றும் நட்டஈடு உள்ளிட்ட ஏனைய செலவினங்களை வழங்குவதற்கு மாத்திரமே அனுமதி வழங்கப்படும் என்றார்.



காலைக்கதிர் Kalaikkathir

# இந்தியாவில் கைதாகி சிறையிடப்படும் மீனவர்களை விடுவிக்க அமைச்சர் டக்ளஸினூடாக நடவடிக்கை

## ஈ.பி.டி.பி. கட்சியின் மன்னார் மாவட்ட இணைப்பாளர் தகவல்

சீரற்ற காலநிலை காரணமாக இலங்கை மீனவர்கள் எல்லை தாண்டி இந்திய கடற்பரப்புக்குள் சென்று, இந்திய கடலோர காவல் படையினரால் கைது செய்யப்பட்டு சிறைப்படுத்தப்பட்டுள்ள நிலையில், இனிவரும் காலங்களில் அவ்வாறான மீனவர்கள் கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா மூலம் விடுவிக்கப்பட்டு, நாடு திரும்ப நடவடிக்கை எடுப்போம் என ஈழ மக்கள் ஜனநாயக கட்சியின் மன்னார் மாவட்ட நிர்வாக செயலாளரும் அமைச்சரின் மாவட்ட இணைப்பாளருமான சுப்பையா சந்துரு தெரிவித்துள்ளார்.

ஈழ மக்கள் ஜனநாயக கட்சியின் மன்னார் மாவட்ட அலுவலகத்தில் இடம் பெற்ற ஊடக சந்திப்பின்போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் அங்கு மேலும் கூறுகையில் -

மன்னார் -தலைமன்னார் பகுதியை சேர்ந்த மீனவர்கள் 2023ஆம் ஆண்டு 11 மாதம் இந்திய கடலோர காவல் படையினரால் எல்லை தாண்டி மீன்பிடியில் ஈடுபட்டதாக குற்றம் சாட்டப்பட்டு கைது செய்யப்பட்டிருந்தனர்.

இவர்கள் கடந்த 5 மாதங்களுக்கு மேலாக இந்திய சிறைகளில் வாடியிருந்தார்கள். அவர்களை விடுவிக்கக் கோரி அவர்களுடைய குடும்பத்தினர் எமது கட்சியை நாடியிருந்தனர்.

நாங்கள் அவர்களது கோரிக்கையை ஏற்று, இவ்விடயத்தை அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவின் கவனத்துக்கு கொண்டு சென்றோம்.

அதனையடுத்து, அமைச்சர் மேற்கொண்ட முயற்சியின் பயனாக கடந்த செவ்வாய்க்கிழமை அனைத்து மீனவர்களும் நாடு திரும்பியுள்ளனர்.

அதேபோல் இயற்கை அனர்த்தங்களால் ஏற்படும் விளைவுகள் காரணமாக இந்திய எல்லையை தாண்டி, இந்திய கரையோர காவல் படையினரால் கைது செய்யப்படும் இலங்கை மீனவர்கள் பல காலங்களாக சிறையில் வாடும் நிலை காணப்பட்டது.

இனிமேல் அவ்வாறான பிரச்சினைகள் இருக்கும் பட்சத்தில், அவை எங்கள் கவனத்துக்கு கொண்டுவரப்பட்டால், நாங்கள் நிச்சயம் அமைச்சரை தொடர்புகொண்டு மீனவர்களை விடுதலை செய்ய நடவடிக்கை எடுப்போம். - என்றார்.



மேலும், விடுதலையான தலைமன்னாரை சேர்ந்த 5 மீனவர்களும் அமைச்சரின் மன்னார் அலுவலகத்துக்குச் சென்று நன்றி தெரிவித்ததோடு ஊடகங்களுக்கும் கருத்து தெரிவித்துள்ளனர். (05)

# சவூதியில் வீட்டுப் பணிப்பெண்ணாக சென்ற மனைவி சித்திரவதைப்படுவதை அறிந்த கணவர் உயிர்மாய்ப்பு

சவூதி அரேபியாவுக்கு வீட்டுப் பணிப்பெண்ணாகச் சென்ற மனைவி சித்திரவதைக்குள்ளானதை அறிந்த கணவர் தவறான முடிவெடுத்து உயிரை மாய்த்துக்கொண்டுள்ளார்.

இந்த சம்பவம் வெள்ளிக்கிழமை இடம்பெற்றுள்ளது.

உயிரிழந்தவர் தம்புள்ளை அலகொலவெள பிரதேசத்தைச் சேர்ந்த 44 வயதுடையவர் என்பதோடு, நான்கு பிள்ளைகளின் தந்தையும் ஆவார்.

உயிரிழந்தவரது மனைவி பொருளாதார நெருக்கடி காரணமாக தம்புள்ளையில் உள்ள வெளிநாட்டு வேலைவாய்ப்பு நிறுவனம் ஒன்றின் ஊடாக கடந்த 2023ஆம் ஆண்டு நவம்பர் 14ஆம் திகதி சவூதி அரேபியாவுக்கு வீட்டுப் பணிப்பெண்ணாகச் சென்றுள்ளார்.

இந்நிலையில், அவ்வீட்டின் உரிமையாளர் இப்பெண்ணை மேலும் நான்கு வீடுகளுக்குப் பணிப்பெண்ணாக அனுப்பி பணம் சம்பாதித்து வந்துள்ளார். வீட்டின் உரிமையாளர், அப்பெண்ணை சித்திரவதை செய்து வந்ததோடு, உரிமையாளரின் மகன் அந்த பெண்ணை பாலியல் ரீதியாக துன்புறுத்தியுள்ளார்.

சித்திரவதைக்குள்ளான பெண், அவ்வீட்டின் பெண் உரிமையாளரிடம் இது தொடர்பாக கூற, 15 நாள்களுக்கு மேற்பட்ட காலம் உணவின்றி அறையொன்றில் அடைத்து வைக்கப்பட்டார்.


பின்னர், அந்த பெண் தன் நிலையை பற்றி அந்நாட்டில் உள்ள தனது சகோதரியிடம் கூறியுள்ளார். உடனே அந்த சகோதரி சவூதி பொலிஸாருக்கும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகத்துக்கும் தகவல் வழங்கியுள்ளார்.

பின்னர், சவூதி பொலிஸாரால் அந்த பெண் காப்பாற்றப்பட்டு, சகோதரியின் உதவியுடன் தாய்நாட்டை வந்தடைந்துள்ளார்.

அதையடுத்து, தம்புள்ளை வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று, வீடு திரும்பியதன் பின்னர், தனக்கு நடந்த அநீதியை அப்பெண் தன் கணவரிடம் தெரிவித்துள்ளார்.

அதன் பின்னர், இது தொடர்பாக கணவர் வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகத்தில் முறைப்பாடு செய்தும் மனைவிக்கு நியாயம் கிடைக்கவில்லை. இதனால் விரக்தியடைந்த கணவர் தவறான முடிவெடுத்து உயிரை மாய்த்துக்கொண்டுள்ளார் எனக் கூறப்படுகிறது.(05)

# புதையல் தோண்டமுற்பட்ட பொலிஸார் உட்பட ஐவர் சிறப்பு அதிரடிபடையினரால் கைதாகினர்



கிளிநொச்சி இராமநாதபுரம் பொலிஸ் பிரிவில் புதுக்காடு பகுதியில் தங்கத்தை தேண்டிய பொலிஸ் உத்தியோகத்தர் உட்பட ஐந்து பேர் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

கடந்த வெள்ளிக்கிழமை இரவு 9.30 மணிக்கு இராமநாதபுரம் பொலிஸ் பிரிவுக்குறப்பட்ட புதுக்காடு பகுதியில் முன்பு விடுதலைப்புலிகள் பயன்படுத்திய முகாம் உள்ள பகுதியில் புதையல் தோண்ட முற்பட்ட போது குறித்த ஐவரும் சிறப்பு அதிரடிபடையினரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கைது செய்யப்பட்டவர்களில் ஒருவர் பொலிஸ் தலைமையகத்தில் கடமையாற்றும் பொலிஸ் உத்தியோகத்தரும் அடங்குகின்றார். அத்துடன் கைது செய்யப்பட்ட சந்தேக நபர்கள் ஏறாவூர் தம்பலகாமம் பகுதியைச் சேர்ந்தவர்கள் ஆவர். அனைவரும் இராமநாதபுரம் பொலிஸ் நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளதுடன் கிளிநொச்சி நீதிமன்றில் முற்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக இராமநாதபுரம் பொலிஸார் தெரிவித்தனர். (05)

# சவால்களுக்கு முகம் கொடுத்து சாதனையைப் படைக்கும் மாணவர்களாக மாறுவது இலட்சியமாக இருக்க வேண்டும்

## கலாநிதி எம்.எல்.ஏ.எம். ஹிஸ்புழ்ழாஹ் அறிவுரை





(கே எ ஹமீட்)

சவால்களுக்கு முகம் கொடுத்து சாதனையைப் படைக்கும் மாணவர்களாக மாறுவது இலட்சியமாக இருக்க வேண்டும் என கலாநிதி எம்.எல்.ஏ.எம். ஹிஸ்புழ்ழாஹ் அறிவுரை வழங்கியுள்ளார்.

மட்டக்களப்பு மத்தி கல்வி வலையத்துக்குப்பட்ட காத்தான்குடி மீராபாலிகா தேசிய பாடசாலையில் பல்கலைக்கழகத்திற்கு தெரிவு செய்யப்பட்ட 102 மாணவிகளைக் கௌரவிக்கும் நிகழ்வு சனிக்கிழமை இடம்பெற்றது.

மீரா பாலிகா தேசிய பாடசாலையில் அதிபர் யூ.எல். மன்சூர் தலைமையில் இடம்பெற்ற இந் நிகழ்வில் பிரதம அதிதியாக முன்னாள் அமைச்சரும் முன்னாள் ஆளுநருமான கலாநிதி எம்.எல்.ஏ.எம். ஹிஸ்புழ்ழாஹ் பங்கேற்று சிறப்பித்தார்.

நிகழ்வில் மட்டக்களப்பு மத்தியில் வலயக் கல்வி அலுவலகத்தின் கல்வி பணிப்பாளர் எம்.எம். அப்துல் ஜவாத் உள்ளிட்ட கல்வியியலாளர்கள், முக்கியஸ்தர்கள், ஆசிரியர்கள், மாணவர்கள் மற்றும் பெற்றோர்கள் என பலரும் பங்குபற்றிச் சிறப்பித்தனர்.(05)

# வீடு புகுந்து இளைஞன் மீது தாக்குதல்: சந்தேகநபர் கனடாவுக்கு தப்பியோட்டம்

முல்லைத்தீவு வற்றாப்பளை பகுதியிலுள்ள வீடொன்றினுள் நுழைந்த கும்பல் வீட்டிலிருந்த இளைஞனை தாக்கியதை தொடர்ந்து, சந்தேக நபரொருவர் கனடா நாட்டுக்கு தப்பித்துச் சென்றுள்ளார் என்று கூறப்படுகிறது.

சனிக்கிழமை அதிகாலை இடம்பெற்ற இந்த தாக்குதல் சம்பவம் தொடர்பாக மேலும் தெரியவருவதாவது -

கடந்த 3 தினங்களுக்கு முன்னர் வற்றாப்பளை பகுதியில் தமது வீட்டின் முன்பாக தாயுடன் நின்றிருந்த குழந்தை மீது மோட்டார் சைக்கிளொன்று மோதியதில் குழந்தை காயமடைந்தது. விபத்துக்குள்ளான அக்குழந்தையின் வீட்டாருக்கும் மோட்டார் சைக்கிளில் சென்று விபத்தை ஏற்படுத்தியதாகக் கூறப்படும் கனடா நாட்டிலிருந்து வருகை தந்த நபருக்கும் இடையே முன்னதாக முரண்பாடு இருந்துள்ளது.

இந்நிலையில், அவ்விபத்துச் சம்பவத்தினையடுத்து, சனிக்கிழமை அதிகாலை ஒரு மணியளவில் வெளிநாட்டிலிருந்து வந்த நபரின் தலைமையில் கும்பலொன்று வீடு புகுந்து இளைஞனை தாக்கிவிட்டு தப்பித்துச் சென்றுள்ளது.

அதனையடுத்து, அவர்கள் வருகை தந்ததாகக் கூறப்படும் மோட்டார் சைக்கிள் இலக்கத்தின் அடிப்படையில், முள்ளியவளை பொலிஸார் சந்தேக நபரின் வீட்டுக்குச் சென்று தாக்குதலின்போது பயன்படுத்தப்பட்ட மோட்டார் சைக்கிளை கைப்பற்றியுள்ளனர். ஆனால், இத்தாக்குதல் சம்பவத்துடன் தொடர்புடைய எவரும் இதுவரை கைது செய்யப்படவில்லை.

இது பற்றி பாதிக்கப்பட்ட தரப்பினரின் உறவினர்கள் தெரிவிக்கையில், வெளிநாட்டிலிருந்து வந்த நபர் ஒரு கும்பலை வைத்து தாக்குதல் நடத்திவிட்டு, கனடா நாட்டுக்கு தப்பித்து சென்றுள்ளார் எனவும், இது ஒரு கொலை முயற்சி எனவும் இத்தாக்குதல் சம்பவம் தொடர்பில் பக்கச்சார்பற்ற விசாரணை நடத்தி தீர்வைப் பெற்றுத்தர வேண்டும் எனவும் கூறியுள்ளனர்.

இந்த தாக்குதலில் காயமடைந்த வற்றாப்பளை பகுதியில் வசிக்கும் 27 வயது இளைஞன் முல்லைத்தீவு மாவட்ட வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகிறார்.

இந்தத் தாக்குதல் சம்பவம் தொடர்பில் முல்லைத்தீவு மாவட்ட வைத்தியசாலையில் உள்ள பொலிஸாரிடம் முறைப்பாடு பதிவு செய்யப்பட்டுள்ளது. (05)

காலைக்கதிர்
Kalaikkathir

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: இல.551 A, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி - 021 222 3000
மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
இணையம் - onlinekathir.com

## தெளிவுபடுத்தவேண்டும் சஜித்

எதிர்க் கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ வடக்கே வந்திருக்கிறார். பாடசாலைகளை நவீனப்படுத்தும் வகையில் திறன் வகுப்பறை உபகரணங்கள் வழங்கும் அவரது திட்டத்தின் கீழ் கிளிநொச்சி, யாழ்ப்பாண மாவட்டப் பாடசாலைகளுக்கு திறன் வகுப்பறை உபகரணங்களை வழங்குவதற்காக அவர் வந்திருக்கின்றார். இருப்பினும் இந்த நிகழ்வு மேடைகளை அவர் தனது அரசியல் களமாகவும் பயன்படுத்தத் தவறுவதில்லை. அதேபோன்று நேற்று கிளிநொச்சியில் நடந்த பாடசாலை நிகழ்வில் பேசும் போது அரசமைப்பின் 13ஆவது திருத்தத்தை தான் நடைமுறைப்படுத்துவார் என்று தெரிவித்திருந்தார்.

அரசமைப்பின் 13ஆவது திருத்தம் கொண்டுவரப்பட்டு கிட்டத்தட்ட 36 வருடங்களாகிவிட்டது. இருந்தாலும் அது முழுமையாக நடைமுறைப்படுத்தப்படவில்லை. அதி–லும் குறிப்பாக மாகாண சபைகளுக்கு உரியதாக குறிப்பிடப்பட்டுள்ள காணி மற்றும் பொலிஸ் அதிகாரங்களில் ஒரு சதவீதம்கூட நடைமுறையாக்கத்திற்கு அனுமதிக்கப்படவில்லை. இது அரசமைப்பை மீறுகின்ற செயலாக இருந்தாலும் ஆளும் தரப்புக்களால் இந்த அத்துமீறல் தொடர்ந்து மேற்கொள்ளப்பட்டுக்கொண்டே இருக்கின்றது.

13ஆவது திருத்தத்தின் மூலம் முன்வைக்கப்பட்ட அதிகாரங்கள், தமிழர்களின் அரசியல் விருப்பங்களுக்கு ஏற்றவை அல்ல என்பது தொடக்கத்திலேயே தெளிவாகத் தெரிவிக்கப்பட்டுவிட்டது. காணி, காவல் அதிகாரங்களும் அதற்குள் அடக்கம். மாகாண சபைக்கான பொலிஸ் அதிகாரம் என்பது ஒன்றுமேயற்றது. அது மத்திய காவல் கட்டமைப்பின் கிழேயே, அதன் படிமுறை குலையாமலேயே உருவாக்கப்பட்டிருப்பது. அதன் மூ–லம் மாகாண சபைகள் பாதுகாப்பு உள்ளிட்ட எந்தவொரு விடயத்தையும் தீர்மானிக்க முடியாது. அப்படியிருக்கும்போது, 13ஐ ஒரு தீர்வாக ஏற்றுக்கொள்ள முடியாது என்பதைத் தமிழர்கள் எப்போதோ தெளிவாகச் சொல்லிவிட்டார்கள். ஆனால், இலங்கையின் அரசமைப்பின் ஊடாக உறுதிப்படுத்தப்பட்டுள்ள 13ஆவது திருத்தத்தை முழுமையாக நடைமுறைப்படுத்துவதன் மூலம் தீர்வு நோக்கிய தனது நல்லெண்ணத்தை இலங்கயின் ஆளும் தரப்புக்கள் வெளிப்படுத்தவேண்டும் என்றும் அவர்கள் எதிர்பார்க்கிறார்கள். அது கொழும்பு அரசு இலங்கை அரசு என்கிற வகையில் நியாயமாக நடப்பதற்கான வெளிப்படுத்துகை என்றும் அவர்கள் கருதுகின்றார்கள்.

எனவே சஜித் பிரேமதாஸ தனது தற்போதைய வடக்குப் பயணத்தின்போது தான் ஆட்சிக்கு வந்தால் 13ஆவது திருத்தத்தை நடைமுறைப்படுத்துவேன் என்று கூறுவது முழுமையான பதின்மூன்றா இல்லையா என்பதைத் தெளிவுபடுத்தவேண்டும். 13 குறிப்பிடும் காணி, பொலிஸ் அதிகாரங்கள் வழங்கப்படுமா, ஆட்சிபீடம் ஏறிய எவ்வளவு காலத்திற்குள் அது நடைமுறைப்படுத்தப்படும் என்பதையும் கூறவேண்டும். அவ்வாறு நல்லெணத்தைக் காட்டும் அதேநேரம், தமிழ் மக்களுக்கு அவர் வழங்கப் போகும் தீர்வு என்ன என்பதையும் வெளிப்படுத்தவேண்டும். அப்படி வெளிப்படுத்துவது சிங்கள மக்களைக் கோபப்படுத்தும் என்று கருதித் தயங்குவாரானால் அது அர்த்தமற்றது. ஏமாற்று வேலை.



# ஏழைத் தாயின் புதல்வர்கள் எழுதிய தீர்ப்பு

ஆனந்தன் செல்லையா



''அரசு கொண்டுவந்த நலத்திட்டங்களால் பயன் அடைந்தவர்கள் எங்கே போனார்கள்?''– 2024 நாடாளுமன்றத் தேர்தலுடன், சட்டமன்றத் தேர்தலையும் சந்தித்த ஆந்திர மாநிலத்தின் முன்னாள் முதல்வர் ஜெகன்மோகன், தனது கட்சி படுதோல்வி அடைந்த நிலையில் வெளிப்படுத்திய ஆதங்கம் இது.

இதே விதமான ஏமாற்றம் பாஜகவுக்கும் அதன் ஆதரவாளர்களுக்கும்கூட இருக்கலாம். இத்தேர்தலில் அதிகத் தொகுதிகளில் வென்ற கட்சியாக பாஜக நீடித்தாலும், கூட்டணி ஆட்சி அமைக்க வேண்டிய நிலை அக்கட்சி–க்கு ஏற்பட்டுள்ளது. இப்படியொரு 'திரிசங்கு சொர்க்க நிலை'யைத் தனது ஆளுமையில் அதிக நம்பி–க்கை உடைய மோடி நிச்சயம் விரும்பியிருக்கமாட்டார். ஆனால், மக்கள் மனத்தில் இருப்பது என்ன என்பதை யாரால்தான் துல்லியமாகத் தெரிந்துகொள்ள முடியும்?

அரசின் பங்களிப்பு: 'மோடி ஆட்சி அமைத்–தால் நாட்டின் பொருளாதார நிலை மிகப் பெரும் அளவில் வளர்ச்சி அடையும். சாலை கட்டமை–ப்பு மேம்படும். மாநகரங்களுக்கு இடையிலான பயண நேரம் கணிசமாகக் குறையும்' என்பன உள்ளிட்ட பல எதிர்பார்ப்புகள் நடுத்தர, உயர் நடுத்தரக் குடும்பத்தினரிடம் முன்பு இருந்தன. அவற்றை நிறைவேற்றும் வகையில் மோடி அரசு சில நடவடிக்கைகளை மேற்கொண்டதையும் மறுக்க முடியாது.

இதுவரை சாலைப் போக்குவரத்தில் பின்–தங்கியிருந்த பல பகுதிகளில் பாலம், சாலைகள் அமைப்பது போன்ற பணிகள் முழுவீச்சில் நடைபெற்றன. நவீன யுகத்தின் தேவைக்கேற்ப ரயில் நிலையங்களையும் வழித்தடங்களையும் மேம்படுத்தும் வேலைகள் நடந்தன.

பல்வேறு மாநிலங்கள் வழியே மணிக்கு 160 கி.மீ. வேகத்தில் பயணிக்க வழிசெய்யும் 'வந்தே பாரத்' ரயில் அறிமுகப்படுத்தப்பட்டது ஓர் உதாரணம் மோடி அரசின் சாதனைத் திட்டமாக பாஜகவினரால் முன்வைக்கப்படும் 'மேக் இன் இந்தியா' திட்டத்தின்கீழ் முற்றிலும் இந்தியாவிலேயே, குறிப்பாக, சென்னை பெரம்பூர் ரயில் பெட்டித் தொழிற்சாலையில் உருவாக்கப்பட்ட ரயில் இது. புத்தாக்கத் துறையில் (ஸ்டார்ட் அப்) தொழில் முனைவோருக்காக ஷரூ.10,000 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டது.

'ஸ்டார்ட் அப் இந்தியா' திட்டத்தின்கீழ் தொழில் தொடங்குவோர், முதல் 3 ஆண்டுகளுக்கு வரி செலுத்தத் தேவை இல்லை. இப்படிப் பல சலுகைக–ளைத் தொழில் முனைவோர் பெற முடிந்தது.

இதுபோன்ற திட்டங்களுக்குப் பிறகும், இந்தத் தேர்தல் பாஜகவுக்குக் கடும் சவாலாகவே இருக்கும் என்றே பலர் கூறி வந்–தனர். அவற்றை 'எதிர்க்கட்சி'களின் குரலாகவே கருதி, பாஜக புறந்தள்ளியது.

வேலைவாய்ப்பின்மையும் தற்கொலைகளும்: பன்னாட்டுத் தொழிலாளர் அமைப்பு, இரண்டு மாதங்களுக்கு முன் வெளியிட்ட அறிக்கையில், இந்தியாவில் வேலையில்லாத் திண்டாட்டம் மிகவும் தீவிரம் அடைந்திருப்பதைச் சுட்டிக காட்டியிருந்தது. இளைஞர்கள் வேலைவாய்ப்பின்றி இருப்பது 2000இல் 35.2 சதவீதமாக இருந்தது. அது 2022இல் 65.7 சதவீதமாக உயர்ந்துள்ளதாக அந்த அறிக்கை கூறியது.

மக்கள்தொகை வளர்ச்சி விகிதத்துக்கு ஏற்ப வேலைவாய்ப்புகளின் விகிதம் அமையவில்லை என்பது பல ஆண்டுகளாகவே ஆய்வுகள் மூலம் உறுதிப்படுத்தப்பட்டு வந்தது. கரோனா பெருந்தொற்றுக் காலத்தில் இப்பிரச்சினை எரிமலையாக வெடித்தது. ஓரளவு பண வசதி கொண்டவர்களுக்கே பொதுமுடக்கக் காலம் பெரும் சாபம்போல அமைந்தது. ஆகஸ்ட், 2020இல் டெல்லி சாந்தினி சௌக் பகுதியில் நகை விற்பனை செய்துவந்த அர்பித் குப்தா, அங்கித் குப்தா ஆகிய இரண்டு சகோதரர்கள் தற்கொலை செய்துகொண்டது ஓர் உதாரணம்.

தாங்கள் பணப் பிரச்சினையில் உள்ளதாக அவர்கள் கடிதம் எழுதிவைத்திருந்தனர். டெல்லியில் ஐந்து நட்சத்திர ஹோட்டல் மேலாளராக இருந்த சலீல் திரிபாதி வேலையிழந்து, உணவு நேரடி விநியோக வேலைபார்க்கும் கட்டாயத்துக்குத் தள்ளப்பட்டு, சாலை விபத்தில் மரணமடைந்த சம்பவம் பொதுமுடக்கக் காலத்தின் ரத்த சாட்சியம்!

தேசியக் குற்ற ஆவணக் காப்பகத்தின் தரவு–களின்படி, 2021இல் தற்கொலை செய்துகொண்ட–வர்களின் எண்ணிக்கை 1,64,033. இதில் 25.6 சதவீதம் பேர், தினக்கூலி வேலை செய்வோர். 14 சதவீதம் பேர், குடும்பத் தலைவிகள் (house-wives). 12.3 சதவீதம் பேர் சொந்தத் தொழில் செய்தோர். 8.4 சதவீதம் பேர் வேலைவாய்ப்பு அற்றோர். (8ஆம் பக்கம் பார்க்க..)

# அம்பாறை மாவட்ட அனைத்து வைத்தியசாலை ஏற்பாட்டாளர்களுக்கும் மேலங்கி வழங்கிவைப்பு





(கே எ ஹமீட்)

ஸ்ரீலங்கா ஜனரஜ சுகாதார சேவைகள் சங்கத்தின் அம்பாறை மவட்ட அனைத்து வைத்தியசாலை ஏற்பாட்டாளர்களுக்கான உத்தியோகபூர்வ மேலங்கி சங்கத்தின் தலைமைக் காரியாலயத்தில் மர்ஹூம் இஸ்திகார் நினைவாக சங்கத்தின் கிழக்கு மாகாண கிளைச்சங்க தலைவர் எஸ்.எ.உமீர் தலைமையில் நடைபெற்றது.

இந்நிகழ்வுக்கு பிரதம அதிதியாக ஸ்ரீலங்கா ஜனரஜ சேவைகள் சங்கத்தின் தலைவர் விமலரத்னவும் சிறப்பு அதிதிகளாக தலைமை காரியாலயத்தில் பணிபுரியும் முகாமைத்துவ உவியாளர்களும் கலந்து சிறப்பித்தமை குறிப்பிடத்தக்கது. பிரதம அதிதியின் கரங்களால் அனைத்து ஏற்பாட்டாளர்களுக்கும் மேலங்கி வழங்கி வைக்கப்பட்டதுடன் தலைவரால் கேக் வெட்டி நிகழ்வை சிறப்பித்தமை குறிப்பிடத்தக்கது. (05)

# ஐஸ் போதைப்பொருள்களுடன் சிறைச்சாலை அதிகாரி கைது

ஐஸ் போதைப்பொருளுடன் சிறைச்சாலை அதிகாரி ஒருவர் நிவித்திகல பொலிஸாரால் சனிக்கிழமை பிற்பகல் கைது செய்யப்பட்டுள்ளார். இரத்தினபுரி பொலிஸ் பிரிவின் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகரான கபில பிரேமதாஸவுக்கு கிடைத்த தகவலின் அடிப்படையில், இரத்தினபுரி - கலவானை பிரதான வீதியில் உள்ள கெடனிவத்த பிரதேசத்தில் இடம்பெற்ற சுற்றிவளைப்பில் சந்தேக நபர் மோட்டார் சைக்கிளுடன் கைது செய்யப்பட்டுள்ளார்.

இந்த நபர் வெலிக்கடை சிறைச்சாலை வைத்தியசாலையில் பணிபுரியும் சிறைச்சாலை அதிகாரி ஆவார்.

இந்நிலையிலி, சந்தேக நபரிடமிருந்து 15 கிராம் ஐஸ் போதைப்பொருள் கைப்பற்றப்பட்டதாக பொலிஸார் தெரிவித்தனர். இவர் நீண்ட காலமாக போதைப்பொருள் கடத்தலில் ஈடுபட்டு வருபவர் என பொலிஸ் விசாரணைகளின்போது தெரியவந்துள்ளது. (05)



குறிஞ்சி மலை நகர் Kurinchi Hill City

கொழும்பு - மட்டக்களப்பு A4 வீதியில் 190 ஆவது kmஇல் 800 m தூரத்தில்

பதுளை மாவட்டம் ஹல்துமுல்லை பிரதேச செயலர் பிரிவு

15 பேர்ச் முதல் 40 பேர்ச் வரையான காணித்துண்டுகள் விற்பனைக்கு!

சுற்றுலா விடுதி, விடுமுறை வீடு ஆகியவற்றுடன் தேயிலை, கோப்பி, கறுவா பயிர்ச்செய்கையும்



அருகில் உள்ள சுற்றுலா மையங்கள்

(100கிமீ சுற்றுவட்டாரத்தில்)

பம்பரகந்த, தியலும, துன்கிந்த, இராவணா, ரம்போடை உட்பட 10இற்கும் மேற்பட்ட நீர்வீழ்ச்சிகள்

தேசிய சரணாலயங்கள் மற்றும் பூங்காக்கள்

Horton Plains National Park, Hakgala Botanical Gardens
Victoria Park, Kande Ela Educational Forest Park
Lunugamvehera National Park, Yala National Park
Udawalawe National Park

கதிர்காமம் முருகன் கோவில், சீதா அம்மன் ஆலயம், ரம்போடை ஆஞ்சனேயர் கோவில்



தனியான வாகன தரிப்பிட வசதி

முழுமையான 24 மணிநேர பாதுகாப்பு சேவை

தொடர்ச்சியான பராமரிப்பு ஏற்பாடு

மின்சார இணைப்பு ஏற்பாடு - குடிதண்ணீர் வசதி

உணவகம் - உள்ளக விளையாட்டுத்திடல்

தேயிலை, கோப்பி, கறுவா தொழிற்சாலைகள்

சுற்றுலா ஏற்பாடுகள்

பேர்ச் 200,000/-

பரப்பு 20 இலட்சம்

5th Project

இது ஒரு கற்பகவனம் செயற்திட்டம்

Good Gift Property Developers (Pvt) Ltd




கிளிநொச்சியில்
ஐஸ்வர்யம்
பெருவிருந்து மண்டபம்
Ishwaryam Banquet Hall
Tel:- 021 228 3701, 071 7354308
Whatsapp:- 071 7736 4308
No.315, Kandy Road,
Kilinochchi
அன்பான வரவேற்பு
தமிழர் பாரம்பரிய உணவு வகைகள்
இந்தியன் இனிப்புப் பண்டங்கள்
இந்தியன் உணவுவகைகள்
Online booking இற்கு விசேட விலைக்கழிவாக 30% பெற்றுக்கொள்ளலாம்.
சகலவிதமான நிகழ்வுகளும் புதிதாக வடிவமைக்கப்பட்ட அனைத்து வசதிகளுடனும் அழகான விருந்துபசார மண்டபம்
ISHWARYAM BANQUET HALL
BANQUET MEALS HALL
FULL OPTION
MAIN DIHES
Vegitable Fried Rice with
Panner & Ghee - 900/=
Chiken Fried Rice with
DESSERT
ice Cream Cup - 60/=
Fruit Salad - 60/=
BEVERAGES
jUICE 200 ml - 70/=
Milk Drink - 70/=

காலைக்கதிர் Kalaikkathir

# ரணிலை ஜனாதிபதி வேட்பாளராகவும் சஜித்தை பிரதமராகவும் கொண்டு வர சிங்கப்பூரில் திட்டம்

## முன்னால் பிரதியமைச்சர் அப்துல்லாஹ் மஹ்ஷூப் தெரிவிப்பு

(ஹஸ்பர் ஏ.எச்)

இலங்கையில் இரண்டு தேர்தல்களை நாடளவிய ரீதியில் மக்கள் எதிர்பார்த்து கொண்டிருக்கின்றனர் என அகில இலங்கை மக்கள் காங்கிரஸின் தேசிய அமைப்பாளரும் முன்னாள் பிரதியமைச்சருமான அப்துல்லாஹ் மஹ்ஷூப் தெரிவித்தார்.

கிண்ணியாவில் நடைபெற்ற ஊடக சந்திப்பில் கலந்து கொண்ட போது இவ்வாறு தெரிவித்தார்.

மேலும் அவர் கூறும்போது -

ஜனாதிபதி தேர்தல் விடயமாக தேர்தல் ஆணையாளர் எதிர்வரும் ஓகஸ்ட் மாதம் ஐந்தாம் திகதிக்கிடையில் அதனுடைய வேட்பு மனு, எப்போது கொடுக்க வேண்டும், தேர்தல் எப்போது நடைபெற வேண்டும் என்ற விடயத்தையும், ஒக்ரோபர் எட்டாம் திகதிக்கிடையில் தேர்தல் நடைபெறும் என்ற விடயத்தையும் கூறி இருக்கின்றார்கள்.

பெரும்பான்மை மக்கள் பொது தேர்தல் தொடர்பாக இன்று ஒரு சலனத்துடன் ஆராய்ந்து கொண்டு இருக்கின்ற போது பல விடயங்கள் வெளி வந்திருக்கின்றன. வருகின்ற எட்டாம் திகதி ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி உடைய தற்போதைய குழுவினர் மற்றும் துமிந்த திசாநாயக்க மாபெரும் மாநாடு ஒன்றை நடத்துவதற்கு முயற்சி செய்து கொண்டிருக்கிறார்கள்.

அதற்கு முன்னர் வருகின்ற ஆறாம் திகதி காஞ்சன விஜயசேகர் மாத்திரையில் மாபெரும் கூட்டம் ஒன்றை ஒழுங்கு செய்திருக்கின்றார்.

இதில் மொட்டுக் கட்சியினருக்கு அழைப்பு விடுக்கவில்லை. அதே நேரத்தில் மொட்டுக் கட்சியை சேர்ந்தவர்கள் அந்த கூட்டத்துக்குச் செல்ல வேண்டாம் என்று அதனுடைய தலைமைய வலியுறுத்தப் பட்டிருக்கின்றார்கள்.

வருகின்ற 16 ஆம் திகதிக்கிடையில் சஜித் பிரேமதாஸவுக்கும் ரணில் விக்கிரமசிங்காவுக்கும் இடையில் ஓர் ஒற்றுமையை ஏற்படுத்தி அதில் ரணில் விக்ரமசிங்கவை ஜனாதிபதி வேட்பாளராகவும் சஜித் பிரேமதாசாவை பிரதமர் வேட்பாளராகவும் கொண்டு வருவதற்கான முயற்சியை இரு பக்கத்தில் உள்ள சிரேஷ்ட நாடாளுமன்ற உறுப்பினர்களும் சிங்கப்பூரிலே முன்னெடுத்திருக்கின்றார்கள்.

ஆகவே 17 ஆம் திகதிக்கிடையில் ஒரு பொதுத் தேர்தல் தொடர்பான விடயம் காத்திரமாக முடிவு செய்யப்பட இருக்கிறதா? இல்லையா? என்பதை பற்றி நாம் காத்திருக்கின்றோம். இந்த விடயம் வந்ததன் பிறகு எமது கட்சியினுடைய நிலைப்பாட்டை நாங்கள் அறிவிக்க இருக்கின்றோம் என அவர் கூறினார். (05)

# சர்வதேச சுற்றாடல் தினம் சம்மாந்துறையில் நடந்தது

*(சர்ஜுன் லாபீர்)*

*உலக சுற்றாடல் தினமான ஜூன் -05 ஐ அனுஷ்டிக்கும் முகமாக சம்மாந்துறை பிரதேச செயலகத்தால் பல்வேறுபட்ட நிகழ்ச்சித் திட்டங்கள் ஒழுங்கமைக்கப்பட்டன.*

*அந்த வகையில் கடந்த வாரம் முழுவதுமாக 51 கிராம சேவகர்கள் பிரிவிலும் சிரமதான நிகழ்வுகள் இடம்பெற்றதோடு சம்மாந்துறை பிரதேசத்துக்குட்பட்ட கமு/சது/கோரக்கர் தமிழ் வித்தியாலயத்தில் சம்மாந்துறை பிரதேச செயலாளர் எஸ்.எல். முஹம்மது ஹனிபா தலைமையில் மரக்கன்றுகள் நடப்பட்டன.*

*அந்நிகழ்வில் உதவிப் பிரதேச செயலாளர் யூ.எம்.அஸ்லம், வெளிகள பிரிவு பிரதான முகாமைத்துவ சேவை உத்தியோகத்தர் எம்.நிசாம், சுற்றாடல் அபிவிருத்தி உத்தியோகத்தர்களான ஏ.எல்.சாஜிதா, ஏ.கே.எப் சாமிலா, அபிவிருத்தி உத்தியோகத்தர் எம்.டி.எப் சம்ஸத் பேகம், திறன் அபிவிருத்தி உத்தியோகத்தர் இர்பான் மௌலான மற்றும் பாடசாலை அதிபர், ஆசிரியர்களும் என பலரும் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.*

*இதன் பின்னர் மாலை இரண்டாம் கட்ட நிகழ்வாக சுற்று சூழல் பாதுகாப்பு சம்மந்தமாக விழிப்புணர்வு செயலமர்வு பிரதேச செயலக கேட்போர் கூடத்தில் இடம்பெற்றது.*

*மத்திய சுற்றாடல் அதிகார சபையின் அபிவிருத்தி உத்தியோகத்தர் குறோசியா கடாபியால் சுற்றுச்சூழல் செயற்பாடு மற்றும் பாதுகாப்பு சம்பந்தமான தெளிவூட்டப்பட்டது.*

*அத்தோடு இந் நிகழ்வில் ஜனாதிபதி தங்க வர்ண பதக்க சுற்றாடல் முன்னோடி மாணவர்களை கௌரவத்து பரிசில்களும் வழங்கப்பட்டதோடு பசுமை சுற்றுச்சூழல் பேரவையுடாக சுற்றாடல் விழிப்புணர்வை ஏற்படுத்திய மின்மினி மின்ஹா என்ற மாணவி விசேடமாக பிரதேச செயலாளரால் கௌரவிக்கப்பட்டமையும் குறிப்பிடத்தக்க விடயமாகும்.*

*(05)*



## ஏழைத் தாயின் ...

(4ஆம் பக்கத் தொடர்ச்சி...)

6.6 சதவீதம் பேர் வேளாண்மைத் துறையில் ஈடுபட்டோர். இவற்றில் பெரும்பாலான மரணங்களுக்கு வருவாய் இன்மையும் ஒரு முக்கியமான காரணமாக இருக்கும் என்கிற புரிதல் மத்திய அரசுக்கும் அந்தந்த மாநில அரசுகளுக்கும் இருந்திருக்க வேண்டும். கூலிவேலை செய்வோரின் கதறலுக்குக் காதுகொடுத்து பாஜக அரசு உறுதியான நடவடிக்கைகளில் கவனம் செலுத்தியிருக்க வேண்டும்.

விவசாயிகளின் வேதனை: விவசாயிகளின் உரிமைப் போராட்ட வரலாற்றில் பாஜக ஆட்சிக் காலத்துக்கு எனத் தனி அத்தியாயம் ஒதுக்கப்பட வேண்டிய அளவுக்குப் பல நிகழ்வுகள் நடந்துவிட்டன. வெங்காயப் பயன்பாட்டுக்கு நாடே மகாராஷ்டிரத்தில் உள்ள லாஸல்கான் சந்தையைச் சார்ந்துள்ளது. சில ஆண்டுகளுக்கு முன், வெங்காய விலை கடும் வீழ்ச்சியைச் சந்தித்தது.

'தேசிய அளவில் வெங்காயத்துக்குத் தட்டுப்பாடு ஏற்பட்டபோது, வெங்காயச் சாகுபடியை இரட்டிப்பாக்குமாறு 2019இல் பிரதமர் மோடி எங்களிடம் கூறினார். அப்போது வெங்காயத்தை ஏற்றுமதி செய்வதற்குத் தடை விதிக்கப்பட்டது. அவர் சொன்னபடி வெங்காய விளைச்சல் இரட்டிப்பு ஆகியுள்ளது. இப்போது அதை வாங்க ஆள் இல்லை. மத்திய அரசு எங்களுக்கு ஊட்டிவிடவும் வேண்டாம் எங்களிடமிருந்து பறித்துக்கொள்ளவும் வேண்டாம்' என அச்சந்தையைச் சார்ந்துள்ள சில விவசாயிகள் வேதனை தெரிவித்திருந்தனர்.

தீர்வு: கொரோனா பொதுமுடக்கத்தின்போது பாஜக அரசு, சில சமூகநலத் திட்டங்களை முன்னெடுத்தது. பிரதம மந்திரி கரீப் கல்யாண் திட்டத்தின்கீழ், 80 கோடி மக்களுக்கு 3 மாதங்களுக்கு அரிசி, பருப்பு உள்ளிட்ட உணவுப்பொருள்கள் வழங்கப்பட்டன. அடித்தட்டு மக்கள் வருவாயை இழந்திருந்த சூழலின் கடுமையை இத்தகைய திட்டங்கள் குறைத்தன. எனினும், காங்கிரஸ் அரசால் 2013 - தேசிய உணவுப் பாதுகாப்புச் சட்டத்தின்கீழ் ஏற்கெனவே நடைமுறைப்படுத்தப்பட்டதன் நீட்சிதான் இத்திட்டம் என்கிறார் பொருளாதாரப் பேராசிரியரான ஜெயதி கோஷ்.

மசாசூசெட்ஸ் அம்கெர்ஸ்ட் பல்கலைலக்கழகத்தில் பணிபுரியும் இவர், தொடர்ந்து மத்திய அரசின் பொருளாதார வளர்ச்சித் திட்டங்களின் போதாமையை விமர்சித்து வருகிறார். "முன்பு ஒரு கிலோ கோதுமை ஷரூ.2க்கும் ஒரு கிலோ அரிசி ஷரூ.3க்கும் அளிக்கப்பட்டதை, கொரோனா காலத்தில் பாஜக அரசு முற்றிலும் இலவசம் என ஆக்கியது. இரண்டுக்கும் பெரிய வேறுபாடு இல்லை. இதையெல்லாம் ஏழைகளுக்கான பரிசு போன்ற பெருமிதத்துடன் பாஜக அரசு செய்தது. உணவுப் பாதுகாப்பு என்பது அடிப்படை உரிமை என்பதை ஆட்சியாளர்கள் மறந்துவிடக்கூடாது. நாட்டில் 10 கோடி மக்கள், போதுமான உணவைப் பெற முடியாத நிலையில்தான் உள்ளனர். கிராமப்புறங்களில் வேலைவாய்ப்பு அளிக்க 100 நாள் வேலைவாய்ப்புத் திட்டம் கொண்டுவரப்பட்டது.

அதன் உண்மையான நோக்கத்துடன் அத்திட்டம் செயலாக்கம் பெறுவதுடன், நகர்ப்புற வேலைவாய்ப்பின்மையைக் களைவதற்கான திட்டமும் முன்னெடுக்கப்பட வேண்டும். சிறு, குறு - நடுத்தரத் தொழில் முனைவோர், கடந்த 10 ஆண்டுகளாகக் கவனிக்கப்படாத நிலையில் உள்ளனர். கடனுதவி பெறுதல், தொழில்நுட்ப வசதி பெறுதல் உள்ளிட்ட அவர்களின் தேவைகள் நிறைவேற்றப்பட வேண்டும்" என ஜெயதி கோஷ் அறிவுறுத்துகிறார்.

ஏழைத் தாயின் புதல்வன் எனத் தாம் அறியப்படுவதில் மோடிக்கு மிகுந்த விருப்பம் உண்டு. ஆட்சிப் பொறுப்புக்கு யார் வந்தாலும், ஏழைத் தாயின் புதல்வர்களின் தேவையை ஒருபோதும் மறந்துவிடக்கூடாது என்பதையே தேர்தல் முடிவுகள் காட்டுகின்றன.

(நன்றி: இந்து தமிழ் திசை)



# பிரதி மதுவரி ஆணையாளரான தங்கராஜா ஓய்வு பெறுகிறார்




(வி.ரி.சகாதேவராஜா)

இலங்கை மது வரித் திணைக்களத்தின் பிரதி ஆணையாளரும் (மனித வளம்) முன்னாள் கிழக்கு மாகாண மதுவரி திணைக்கள உதவி ஆணையாளருமான ரோட்டேரியன் சண்முகம் தங்கராஜா தனது 60 ஆவது வயதில் ஓய்வு பெற்றார்.

அவருக்கு மது வரி திணைக்கள தலைமையகத்திலும் திருமலை மாகாண தலைமையகத்திலும் பிரியாவிடை நிகழ்வு சிறப்பாக நடைபெற்றது.

சண்முகம் தங்கராஜா மதுவரித் திணைக்கள வரலாற்றில் கிழக்கு மாகாணத்தில் இருந்து தெரிவுசெய்யப்பட்ட முதலாவது பிரதி ஆணையாளர் என்ற பெருமையைப் பெற்றவர்.

இவர் மதுவரி திணைக்கள கிழக்கு மாகாண உதவி ஆணையாளராக செயற்படும் அதேவேளை, முழு இலங்கைக்கான பிரதி ஆணையாளராக பதில் கடமையையும் ஆற்றியிருந்தார்.

சண்முகம் தங்கராஜா பெரியகல்லாற்றை பிறப்பிடமாகவும், கல்லடியை வசிப்பிடமாகவும் கொண்டவர். ஆரம்பக் கல்வியை பெரிய கலலாற்றிலும், பின்னர் வந்தாறுமூலை மற்றும் மட்டக்களப்பு இந்து கல்லூரி ஆகியவற்றில் இடைநிலை உயர்நிலைக் கல்வியையும் பெற்று மதுவரி திணைக்களத்தில் மதுவரி பரிசோதகராக இணைந்து கொண்டார் .

32 வருட சேவைக் காலத்தில் கிழக்கு மாகாணத்தில் இருந்து முதன் முதலில் மதுவரி பிரதி ஆணையாளராக நியமனம் பெற்ற ஒரே ஒருவர் தங்கராஜா ஆவார்.

சிறந்த விளையாட்டு வீரரான தங்கராஜா கல்முனை ரோட்டரி கழகதலைவராக இருந்து, தற்போது மட்டக்களப்பு றோட்டரி கழகத்தின் நிர்வாகசபை உறுப்பினராக சமூக பணியாற்றி வருகிறார்.

முன்னர், அம்பாறை மாவட்டத்தின் கலால் அத்தியட்சகராக கடமையாற்றிய சண்முகம் தங்கராஜா, கிழக்கு மாகாணத்தின் புதிய உதவி ஆணையாளராக பதவி உயர்வு பெற்று 01.01.2023 அன்று தங்கள் கடமைகளை பொறுப்பேற்றிருந்தார்.

சண்முகம் தங்கராஜா கோட்டைமுனை விளையாட்டு கழகத்தின் உப தலைவராகவும், கோட்டைமுனை விளையாட்டு கிராமத்தின் பணிப்பாளர் சபை பிரதிநிதியாகவும் செயற்படுகின்றார் என்பது குறிப்பிடத்தக்க விடயமாகும். (05)

# 'சுயமரியாதை நடை – 2024' யாழ்ப்பாணத்தில் நடந்தது



யாழ்ப்பாணத்தில் 'சுயமரியாதை நடை - 2024' சனிக்கிழமை காலை இடம்பெற்றது.

யாழ் மத்திய பஸ் நிலையம் முன்னாலிருந்து ஆரம்பித்த குறித்த நடைபயணம், சத்திரச் சந்தியை நோக்கி பயணித்து பண்ணை வீதியூடாக பொலிஸ் நிலைய வீதி சென்று பொது நூலகம் முன்பாக நிறைவடைந்தது.

சுயமரியாதை, சமத்துவம், சமூக நீதியை அடிப்படையாகக் கொண்டு ஏற்பாடு செய்யப்பட்டிருக்கும் எமது சுயமரியாதை நடைபயணம் மேற கொள்ளப்பட்டது என ஏற்பாட்டாளர்கள் தெரிவித்தனர். (05)

# வேப்பையடி கலைமகள் வித்திக்கு புதிய ஸ்மார்ட் கணனி ஆய்வு கூடம்

( ஏ.எல்.எம்.ஷினாஸ்)

சம்மாந்துறை கல்வி வலயத்திற்குப்பட்ட நாவிதன்வெளி வேப்பையடி கலைமகள் வித்தியாலயத்தில் புதிய ஸ்மார்ட் கணனி ஆய்வு கூடத்தை திறந்து வைக்கும் நிகழ்வு பாடசாலையின் அதிபர் கே.தியாகராஜா தலைமையில் கடந்த வெள்ளிக்கி ழமை நடைபெற்றது. இலங்கை குடிமக்கள் மேம்பாட்டு வணிக நிதி நிறுவனம் வசதி குறைந்த பாடசாலை மாணவர்களின் தொழில்நுட்ப அறிவை மேம்படுத்தும் நோக்கில் முன்னெடுத்து வரும் வேலைத் திட்டத்தின் கீழ் 40 லட்சம் ரூபா செலவில் மாணவர்களுக்கான இந்த கணனி ஆய்வு கூடம் கையளிக்கப்பட்டது.

இதில் சிடிபி நிறுவனத்தின் முகாமைத்துவ பணிப்பாளர் மகேஷ் நாணயக்கார பிரதம அதிதியாக கலந்துகொண்டு கணினி ஆய்வு கூடத்தைத் திறந்து வைத்தார்.

இந்த நிகழ்வில் சம்மாந்துறை வலயக் கல்வி அலுவலகத்தின் பிரதிக் கல்விப் பணிப்பாளர் திருமதி ஏ.சி.என். நிலோபா, பிரதி கல்வி பணிப்பாளரும் நாவிதன்வெளி கோட்டக்கல்வி பணிப்பாளருமான பி.பரமதயாளன், பிரதி கல்வி பணிப்பாளர்களான ஏ.எம்.சியாத், என்.எம். நாஸிர் அலி, வேப்பையடி இராணுவ முகாம் பொறுப்பதிகாரி ஆர்.ரணவீர உட்பட கல்வி அதிகாரிகள், சி டி பி நிறுவனத்தின் உயர் அதிகாரிகள், பாடசாலையின் அபிவிருத்திக் குழு உறுப்பினர்கள், நலன் விரும்பிகள் என பலரும் இதில் கலந்து கொண்டனர். (05)

# தேசிய நல்லிணக்க ஒருங்கிணைப்பாளராக கலாநிதி சிவஶ்ரீ பாபுசர்மாவுக்கு நியமனம்

தேசிய ஒற்றுமை மற்றும் நல்லிணக்கத்திற்கான ஒருங்கிணைப்பாளராக கலாநிதி சிவஶ்ரீ ராமச்சந்திர குருக்கள் பாபுசர்மா நியமிக்கப்பட்டுள்ளார். கலாநிதி பாபுசர்மா, முன்னாள் ஜனாதிபதியும் பிரதமருமான மஹிந்த ராஜபக்ஷவின் இந்துமத விவகார இணைப்பாளர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

குறித்த நியமனம் நிதி, சிறைச்சாலை அலுவலகம் மற்றும் அரசமைப்பு மறுசீரமைப்பு அமைச்சர் ஜனாதிபதி சட்டத்தரணி கலாநிதி விஜயதாஸ ராஜபக்ஷவால் வழங்கப்பட்டுள்ளது.

நாட்டின் தேசிய ஒற்றுமை மற்றும் சகவாழ்வை வலுப்படுத்தல், சக இனங்களுக்கு இடையில் சமாதானத்தையும் சகவாழ்வையும் கட்டி எழுப்புதல் போன்றவற்றை நோக்காக கொண்டு அனைத்து இனங்களையும் பிரதிநிதித்துவப்படுத்தும் வகையில் சர்வ மத நிகழ்ச்சிகளை ஒழுங்குபடுத்தல் மற்றும் மேம்படுத்தலுக்காக இவ் அமைச்சிற்கு வழங்கப்பட்டுள்ள செயற்பணிகளை ஒருங்கிணைத்தல் அடிப்படையில் இப்பதவி வழங்கப்பட்டுள்ளது. (05)

# பாட்டாளிபுரம் பூஞ்சோலையாள் பத்திரகாளி அம்பாள் வருடாந்த வேள்வியும் கலைவிழாவும் நூல் வெளியீடும்




( ஹஸ்பர் ஏ.எச் )

மூதூர் கிழக்கு பாட்டாளிபுரம் அருள் மிகு அகம் பூஞ்சோலை ஸ்ரீபத்திரகாளி அம்பாள் ஆலய வருடாந்த வேள்வியும் கலைவிழாவும் நூல் வெளியீடும் வியாழக்கிழமை இடம் பெற்றது.

காலை சுபநேரத்தில் மடைப்பெட்டி அருள்மிகு பாட்டாளிபுரம் விநாயகர் ஆலயத்தில் இருந்து பாரம்பரிய முறைப்படி எடுத்துவரப்பட்டது.

அதன்பின்னர் விசேஷ அபிசேக ,அலங்கார பூஜைகள் அருள்மிகு அகம் பூஞ்சோலை ஸ்ரீபத்திரகாளி அம்பாளுக்கு நடைபெற்றன.

கலை இலக்கியவிழாவில் பாடசாலை மாணவர்கள் உட்படப் பலர் கலந்து சிறப்பித்தனர். மாலை நிகழ்வில் ஊடக கலை இலக்கிய ஆன்மீக செயற்பாட்டாளர்கள் கௌரவிக்கப்பட்டனர்.

ஊடகத்துறையில் அரசரெத்தினம் அச்சுதன் கௌரவிக்கப்பட்டார்.

ஆலயத்தின் பிரதானசெயற்பாட்டாளர் பொ. சற்சிவானந்தம் தலைமையில் ஆலயத்தின் பூஞ்சோலையாள் வரலாற்று நூல் வெளியீடும் இடம்பெற்றது. பக்தர்களுக்கு அன்னதானம் வழக்கப்பட்டது. வெள்ளிக்கிழமை அதிகாலை தீமிதிப்பு இடம் பெற்று பொங்கல் விசேஷ பூஜை நிகழ்வுகள் நிறைவடைந்தன. (05)

# புலமைப் பரிசில் கற்கும் மாணவர்களுக்கு இலவச வழிகாட்டி நூல்கள் அன்பளிப்பு

(ஹஸ்பர் ஏ.எச்)



திருகோணமலை மாவட்டத்திலிருந்து ஐந்தாம் ஆண்டு புலமைப்பரிசில் தேர்வுக்குத் தோற்றும் மாணவர்களது பெறுபேறுகளை உயர்த்தும் நோக்கோடு மூதூர் கோட்டத்தில் உள்ள பாட்டாளி புரம், நீலாங்கேணி, இளக்கந்தை, நல்லூர் ஆகிய பின்தங்கிய ஊர்களில் அமைந்துள்ள பள்ளிக்கூடங்களில் கல்வி பயிலும் ஐந்தாம் வகுப்பு மாணவருக்கு ஒவ்வொருவருக்கும் தலா 1930 ஷரூபா விலையான ஆற்றல் என்னும் புலமைப்பரிசில் தேர்வு வழிகாட்டி நூல்கள் திருக்கோணமலை மாவட்ட நலன்புரிச் சங்கத்தால் வழங்கப்பட்டன.

இந்நூல்களை திருகோணமலை மாவட்ட நலன்புரிச் சங்கத் தலைவர் கதிரவேலு சண்முகம் குகதாசன், செயலாளர் கணபதிப்பிள்ளை சிவானந்தன், பொருளாளர் இராசரத்தினம் கோகுலதாசன் ஆகியோர் வழங்கி வைத்தனர். இதில் ஆசிரியர்கள் பாடசாலை மாணவர்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர். (05)

காலைக்கதிர் Kalaikkathir

# சிட்னியில் ‘அடிகளார் படிவ மலர்’ நூல் தினகரன் பிரதம ஆசிரியரிடம் கையளிப்பு

## சிட்னியில் நடைபெற்ற நூல் வெளியீட்டுவிழாவில் வைத்து







(வி.ரி.சகாதேவராஜா)

பிரபல எழுத்தாளர் ஐங்கரன் விக்கினேஸ்வராவால் எழுதப்பட்ட மூன்று நூல்களான பாலஸ்தீனம் எரியும் தேசம் ,ஓர்மத்தின் உறைவிடம் இஸ்ரேல் , இலங்கை இதழியலில் சிவகுருநாதன் ஆகிய நூல்கள் வைபவ ரீதியாக வெளியீட்டு வைபவம் ஆஸ்திரேலியா சிட்னி பெமுல்வே மண்டபத்தில் கடந்த வெள்ளிக்கிழமை நடைபெற்றது.

இந்த நிகழ்வுக்கு பிரதம அதிதியாக இலங்கையில் இருந்து சென்ற தினகரன் பத்திரிகையின் பிரதம ஆசிரியர் தே.செந்தில்வேலவர் கலந்து கொண்டிருந்தார்.

வெகு சிறப்பாக நடைபெற்ற இந்த நிகழ்வின் போது சிட்னி உதய சூரியன் மாணவர் உதவி மையத்தின் நிர்வாக இயக்குநர் உதயசூரியன் மாணவர் நலன்புரி மையத்தின் ஸ்தாபகர் குணரெட்ணம் நாகமணியால் ‘சிட்னியில் சுவாமி விபுலானந்த அடிகளார் படிவமலர்’ ஒன்றும் பிரதம அதிதிக்கு வழங்கிவைக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (05)

# உலக சுற்றாடல் தினத்தினை முன்னிட்டு அறுகம்பே சுற்றுலா வளாகம் துப்புரவு





(பாறுக் ஷிஹான்)

சுற்றுலாத்துறைக்கு பிரசித்தி பெற்ற அறுகம்பே கடற்கரை பிரதேசத்தையும் அதனை அண்டியுள்ள சுற்றுச் சூழலையும் பாதுகாக்கும் நோக்கில் பொத்துவில் சுகாதார வைத்திய அதிகாரி காரியாலத்தால் ஏற்பாடு செய்யப்பட்ட சிரமதான நிகழ்வு மிகவும் சிறப்பாக இடம்பெற்றது.

உலக சுற்றாடல் தினத்தை முன்னிட்டு பொத்துவில் சுகாதார வைத்திய அதிகாரி காரியாலத்தால் ஏற்பாடு செய்யப்பட்ட குறித்த சிரமதான நிகழ்வு சுகாதார வைத்திய அதிகாரி வைத்தியர் எப்.எம்.உவைஸ் தலைமையில் இடம்பெற்றது.

பொத்துவில் சுகாதார வைத்திய அதிகாரி காரியாலயம், அறுகம்பே ஓட்டோ உரிமையாளர் நலன்புரிச் சங்கம், கிளீன் ஸ்ரீலங்கா அமைப்பு, அறுகம்பே சுற்றுலா பொலீஸ் பிரிவு ஆகிய நிறுவனங்களின் பூரண ஒத்துழைப்புடன் இந்த சிரமதானப் பணி முன்னெடுக்கப்பட்டது.

‘தூய்மையான கடற்கரை பிரதேசம்’ எனும் தொனிப்பொருளில் இடம்பெற்ற சிரமதான நிகழ்வில் பொத்துவில் சுகாதார வைத்திய அதிகாரி காரியாலய உத்தியோகத்தர்கள் மற்றும் ஊழியர்கள், அறுகம்பே ஓட்டோ உரிமையாளர் நலன்புரிச் சங்கத்தின் உறுப்பினர்கள், கிளீன் ஸ்ரீலங்கா அமைப்பினர், அறுகம்பே சுற்றுலா பொலீஸ் பிரிவின் பொலீஸ் உத்தியோகத்தர்கள் கலந்துகொண்டனர்.

இதன்போது அறுகம்பே கடற்கரை பிரதேசத்தில் காணப்பட்ட பொலிதீன்கள், தின்மக்கழிவுப் பொருள்கள் துப்புரவு செய்யப்பட்டு அகற்றப்பட்டதுடன் டெங்கு பெருகும் இடங்களும் அழிக்கப்பட்டன. மேலும் கடற்கரை பிரதேசத்தில் போக்குவரத்துக்கு இடையூறாக இருந்த தடைகளும் அகற்றப்பட்டமை குறிப்பிடத்தக கது. (05)

# 2024 ஆண்டுக்கான உடல் கட்டழகு போட்டி: சம்மாந்துறை ஏ.எம் பாஹிம் இரண்டாமிடம்




(தில்சாத் பர்வீஸ்)

2024 ஆண்டுக்கான கிழக்கு மாகாண விளையாட்டு விழா மட்டக்களப்பில் இடம்பெற்றிருந்தது.

ஆண்களுக்கான உடல் கட்டழகு போட்டியில் கல்முனை பிரதேசம் மூன்று பதக்கங்களை தம்வசப்படுத்தியுள்ளது.

இவ் விளையாட்டு விழாவில் 47 பேர் கலந்து கொண்டிருந்தனர். இவர்களில் ஆண்களுக்கான உடல் கட்டழகு போட்டியில் கல்முனை பிரதேசம் இரண்டு தங்க பதக்கங்களையும், ஒரு வெள்ளி பதக்கம் அடங்கலாக மூன்று பதக்கங்களை வெற்றி யீட்டியுள்ளது.

இதில் 85 கிலோ எடைப்பிரிவில் பங்குபற்றி நிமலன் தங்கப் பதக்கத்தையும் , 90 கிலோ எடைப்பிரிவில் பங்குபற்றிய இகாப் தங்க பதக்கத்தையும், 80 கிலோ எடைப்பிரிவில் பங்குபற்றிய பாஹிம் வெள்ளி பதக்கத்தையும் வெற்றியீட்டியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (05)

# 31 கிலோ கேரளா கஞ்சாவுடன் யாழில் இளைஞன் கைதானார்



யாழ்ப்பாணத்தில் 31 கிலோ கேரளா கஞ்சாவுடன் இளைஞன் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

வடமராச்சி மணற்காட்டு பகுதியில் கேரளா கஞ்சா பொதிகளை இளைஞன் ஒருவர் பதுக்கி வைப்பதாக இராணுவ புலனாய்வு பிரிவினருக்குக் கிடைக்கப்பெற்ற இரகசியத் தகவலின் அடிப்படையில் சம்பவ இடத்திற்கு விரைந்த இராணுவத்தினர் , கஞ்சா பொதிகளுடன் இளைஞனைக் கைது செய்துள்ளனர்.

மீட்கப்பட்ட கஞ்சா பொதிகள் 31 கிலோ நிறையுடையது எனவும் , கைது செய்யப்பட்ட இளைஞனையும் , மீட்கப்பட்ட கஞ்சாவையும் மேலதிக சட்ட நடவடிக்கைக்காக பருத்தித்துறை பொலிஸாரிடம் ஒப்படைத்துள்ளதாக இராணுவ தரப்பினர் தெரிவித்துள்ளனர். (05)

# வடமேல் மாகாண பட்டதாரி ஆசிரியர்கள் நியமனம்வழுங்கும் 2 ஆம் கட்ட நிகழ்வு

*(எம்.எம்.ஜெஸ்மின் )*

*வடமேல் மாகாணத்தில் 668 பட்டதாரிகளுக்கான ஆசிரியர் நியமனம் வழங்கும் இரண்டாம் கட்ட நிகழ்வு குருநாகல் மலியதேவ ஆண்கள் பாடசாலையில் ஆளுநர் நஸீர் அஹமட் தலைமையில் நடைபெற்றது.*

*இந்த நிகழ்வில் வடமேல் மாகாண பிரதம செயலாளர் தீபிகா கே. குணரத்தின, பிரதம அமைச்சு மற்றும் கல்வி அமைச்சின் செயலாளர் நயனா காரியவசம், ஆளுநரின் செயலாளர் இலங்கக்கோன், மாகாண கல்வி பணிப்பாளர் முதிதா ஜயதிலக, உள்ளிட்ட பலரும் கலந்துகொண்டனர். (05)*

## அம்பாறை மாவட்ட மேலதிக செயலராக எஸ்.ஜெகராஜன் நியமனம் பெற்றார்

பாறுக் ஷிஹான்

அம்பாறை மாவட்ட மேலதிக அரசாங்க அதிபராக இலங்கை நிர்வாக சேவை தரம் 1 அதிகாரியான காரைதீவு பிரதேச செயலாளர் சிவஞானம் ஜெகராஜன் நியமிக்கப்பட்டுள்ளார்.

பொதுச்சேவை ஆணைக்குழுவின் பரிந்துரைக்கமைவாக பொது நிர்வாக அமைச்சு இந்த நியமனத்தை வழங்கியுள்ளது.

முன்பு மேலதிக அரசாங்க அதிபராக இருந்த வேதநாயகம் ஜெகதீசன் போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சின் மேலதிக செயலாளராக (அபிவிருத்தி) பதவி உயர்வு பெற்று செல்கின்ற காரணத்தால் இந்த நியமனம் மேற்கொள்ளப்பட்டிருக்கின்றது.

2007 இல் இலங்கை நிர்வாக சேவையில் இணைந்து கொண்ட காரைதீவைச் சிவ.ஜெகராஜன், காரைதீவு பிரதேச செயலகத்தில் உதவி பிரதேச செயலாளராகவும் பிரதேச செயலாளராகவும் கடமையாற்றி வந்த வேளையிலே கல்முனை வடக்கு உப பிரதேச செயலாளராகவும் கடமையாற்றி இருந்தார்.

2013 இல் திருக்கோவில் பிரதேச செயலாளராக நியமிக்கப்பட்டு அங்கு சிறப்பான பணியாற்றி வந்த வேளையில் 2019 மீண்டும் காரைதீவுக்கு நியமிக்கப்பட்டார்.

ஐந்து வருட கால சேவையை பூர்த்தி செய்து தற்பொழுது அவர் அம்பாறை மாவட்ட மேலதிக அரசாங்க அதிபராக நியமிக்கப்பட்டிருக்கின்றார்.

இவரது இடத்திற்கு நாவிதன்வெளி பிரதேச செயலாளர் திருமதி சஜிந்ரன் இராகுலநாயகி பதில் பிரதேச செயலராக நியமிக்கப்பட்டுள்ளார்.

இதே வேளை போக்குவரத்து நெடுஞ்சாலைகள் அமைச்சின் மேலதிக செயலாளராக வி. ஜெகதீசன் பதவியேற்றார்

அம்பாறை மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் வி.ஜெகதீஸன் பதவியுயர்வு பெற்று போக்குவரத்து நெடுஞ்சாலைகள் அமைச்சின் மேலதிக செயலாளராக தனது கடமைகளை பொறுப்பேற்றார்.

அம்பாறை மாவட்டத்தில் மேலதிக அரசாங்க அதிபராக வி.ஜெகதீஸன் மூவின மக்களுக்காகவும் சமமாக பணியாற்றிய உயர் அதிகாரி இவராவார். (05)

## மார்க்ஸ்மேன் வி. கழக சீருடை அறிமுக நிகழ்வு





(எஸ். சினீஸ் கான்)

அட்டாளைச்சேனை பிரதேச செயலகத்துக்குட்பட்ட மார்க்ஸ்மேன் விளையாட்டுக் கழகத்தின் 2024 ஆம் ஆண்டுக்கான மேலங்கி அறிமுக நிகழ்வு அண்மையில் இடம்பெற்றது.

விளையாட்டுக் கழகத்தின் தலைவர் றிஷாட் ஏ காதர் தலைமையில் அட்டாளைச்சேனை ஹனீபா ஹாஜியார் விடுதியில் இடம்பெற்ற இந்த நிகழ்வுக்கு கல்முனை மாநகர முன்னாள் முதல்வரும், மெட்ரோ பொலிட்டன் கல்லூரியின் தவிசாளருமான கலாநிதி சிராஸ் மீராசாஹீப் பிரதம அதிதியாகக் கலந்து கொண்டார்.

கடந்த காலங்களில் இப்பிராந்தியத்தில் விளையாட்டு கழகங்களின் வளர்ச்சியில் பல்வேறுபட்ட ஆலோசனைகளை வழங்கிய ஓய்வு பெற்ற மாவட்ட மெய்வல்லுநர் பயிற்றுவிப்பாளர் எஸ். எல். தாஜ/தீனின் சேவையைப் பாராட்டியும், பிரதம அதிதி அம்பாறை மாவட்டத்தில் விளையாட்டு கழகங்களுக்கு ஆற்றிவரும் பங்களிப்புக்காகவும், சமூக சேவைக்காகவும் கழகத்தின் சார்பில் பொன்னாடை போர்த்தி நினைவுச்சின்னம் வழங்கியும் கௌரவிக்கப்பட்டனர .(05)

## அரசின் அரிசி வழங்கும் நிகழ்வில் அம்பாறை மாவட்டச் செயலர்





(வி.ரி.சகாதேவராஜா)

குறைந்த வருமானம் பெறும் குடும்பங்களுக்கு இரண்டாம் கட்ட அரிசி வழங்கும் நிகழ்வு காரைதீவு பிரதேச செயலகத்தில் நடைபெற்றது.

காரைதீவு பிரதேச செயலாளர் சிவ. ஜெகராஜன் தலைமையில் இடம்பெற்ற இந் நிகழ்வில் அம்பாறை மாவட்ட அரசாங்க அதிபர் சிந்திக்க அபேவிக்கிரம பிரதம அதிதியாக கலந்து கொண்டு நிகழ்வை ஆரம்பித்து வைத்தார் .

இதன் போது மாவட்ட மற்றும் பிரதேச செயலக நிருவாக உத்தியோகத்தர்களும் கலந்துகொண்டனர். (05)

## சம்மாந்துறை ஆதார வைத்தியசாலை புதிய வைத்திய அத்தியட்சகர் நியமனம்

(வி.ரி.சகாதேவராஜா)



சம்மாந்துறை ஆதார வைத்தியசாலையின் புதிய வைத்திய அத்தியட்சகராக காரைதீவைச் சேர்ந்த வைத்தியர் தர்மலிங்கம் பிரபாசங்கர் சுகாதார அமைச்சால் நியமிக்கப்பட்டுள்ளார்.

அவர் கடந்த வியாழக்கிழமை அங்கு சென்று கடமையை பொறுப்பேற்றுள்ளார்.

பதில் வைத்திய அத்தியட்சகராகவிருந்த மகப்பேறு வைத்திய நிபுணர் வைத்தியர் ரொகானிடமிருந்து ஆவணங்களை பெற்றுக் கொண்டார்.

வைத்தியசாலை அபிவிருத்திக் குழு வாழ்த்தி வரவேற்றது.

இவர் கடந்த இரண்டு வருட காலமாக கொழும்பு பல்கலைக்கழகத்தில் பட்டப்பின் நிர்வாக முதுவிஞ்ஞானமாணி பயிற்சி நெறியை மேற்கொண்டிருந்தார் .

இவ்விதம் இரு வருட கால பயிற்சியை முடித்த 23 பேருக்கு புதன்கிழமை சுகாதார அமைச்சில் வைத்து நாட்டில் உள்ள பெரும் வைத்தியசாலைகளுக்கு நியமனம் கடிதங்கள் வழங்கி வைக்கப்பட்டன.

காரைதீவைச் சேர்ந்த வைத்தியர் பிரபாசங்கர் முன்னதாக ஆரையம்பதி பிரதேச சுகாதார வைத்திய அதிகாரியாக கடமையாற்றி இருந்தார்.

இருவருட வைத்திய நிர்வாக துறை பட்டப்பின் பயிற்சி முடித்து வைத்திய அத்தியட்சகராக தெரிவாகிய முதல் காரைதீவு வைத்தியர் இவர் என்பது குறிப்பிடத்தக்கது.

இவர் பிரபல பல் வைத்திய அதிகாரி வைத்தியர் தர்மலிங்கம் உமாசங்கரின் சகோதரராவார். (05)

## மரம் நடுகை நிகழ்வு காரைதீவில் நடந்தது

(வி.ரி. சகாதேவராஜா)

தேசிய சுற்றாடல் வாரத்தை முன்னிட்டு காரைதீவு கமநல சேவைகள் நிலையத்தில் மரம் நடுகை காரைதீவு பிரதேச விவசாய போதனாசிரியை திருமதி சஜிகலா ரகுநந்தன் தலைமையில் நடைபெற்றது.

இந்த நிகழ்வில் விவசாய உதவிப் பணிப்பாளர் திருமதி அழகுமலர் ரவீந்திரன் பிரதம அதிதியாகக் கலந்து கொண்டு சிறப்பித்தார்.

காரைதீவு பிரதேச விவசாய பெரும்பாக உத்தியோகத்தர் பாத்திமா சர்ஜானா விவசாய போதனாசிரியர் ( மத்தி)பி.பிரதீப் மற்றும் தொழில்நுட்ப உத்தியோகத்தர்கள் பலரும் கலந்து கொண்டனர். (05)



## மாற்றுதிறனாளிகளுக்கான இலவச மருத்துவ முகாம்



(ஹஸ்பர் ஏ.எச்)

தம்பலகாமம் பிரதேச செயலகப் பகுதியில் உள்ள உடல் ரீதியாக பாதிப்படைந்த மாற்றுத் திறனாளிகளுக்கான இலவச ஆயுர்வேத மருத்துவ முகாம் ஒன்று தம்பலகாமம் பிரதேச செயலக மண்டபத்தில் இடம் பெற்றது.

தம்பலகாமம் பிரதேச செயலாளர் ஜெ.ஸ்ரீபதியின் வழிகாட்டுதலுக்கிணங்க இடம்பெற்ற குறித்த மருத்துவ முகாம் கப்பல் துறை ஆயுர்வேத தளவைத்தியசாலையுடன் இணைந்து தம்பலகாமம் பிரதேச செயலகமும் இணைந்து ஏற்பாடு செய்திருந்தது. மருதம் மாற்றுத் திறனாளிகள் சங்கம் மற்றும் எகமுத்து ஆகிய மாற்றுத் திறனாளிகள் சங்கத்தைச் சேர்ந்த உடல் ரீதியாகப் பாதிக்கப்பட்ட மாற்றுத் திறனாளிகள் இதில் கலந்துகொண்டனர்.

இதில் பல வைத்திய ஆலோசனைகள் வழங்கப்பட்டதுடன் வைத்திய சேவைகளும் சிறப்பாக இடம்பெற்றன.

இதில் கப்பல் துறை ஆயுர்வேத தளவைத்தியசாலையின் வைத்திய அத்தியட்சகர் ஏ.ஏ.அனஸ்டீன், வைத்தியர்கள்,சமூக சேவைகள் உத்தியோகத்தர், சமூக சேவைகள் திணைக்களத்தின் அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர். (05)

JRIDE
BEYOND THE ROAD

Safety and comfort are our concern

ஜேரைட்
JRIDE
TAXI APP FROM JAFFNA
இலங்கை முழுவதும் | Islandwide

DOWNLOAD PASSENGER APP:

ஆட்டோ கட்டணங்களால் ஆடிப்போயுள்ளீர்களா?
கவலையினை விடுங்கள்.
நாங்கள் தயாராகிவிட்டோம்!
யாழ்ப்பாணத்தில் இருந்து உங்களுக்காக உருவாக்கப்பட்ட ரக்சி அப் (Taxi App)

jride
JRide - Beyond the Road
Speed IT net • Travel & Local
Install
JRide Driver: Drive & Deliver
Speed IT net • Travel & Local
Install

இலகு முறையில் கணக்கை பதிவு செய்து உங்கள் பயணத்தை தொடங்கலாம்!
YOU CAN EASILY REGISTER & BOOK YOUR RIDE

GET IT ON Google Play
Download on the App Store

வாகன உரிமையாளர்களே ஓட்டுனர்களே!
உங்கள் தனிப்பட்ட மற்றும் வாடகை வாகனங்களை பயன்படுத்தி உங்கள் வருமானத்தை அதிகரிக்க ஒரு தீர்வு!

இதுவரை பதிவு செய்யாதவர்கள் JRide Driver செயலியில் இலகு முறையில் கணக்கை பதிவு செய்து உங்கள் சேவையை தொடங்கலாம்!

DOWNLOAD DRIVER APP:

jride
JRide Driver: Drive & Deliver
Speed IT net • Travel & Local
Install
JRide - Beyond the Road
Speed IT net • Travel & Local
Install

YOU CAN EASILY REGISTER & ADD YOUR VEHICLE

GET IT ON Google Play
Download on the App Store

SCHEDULED BOOKING
New Feature
புதிய வசதி

நீண்ட தூர பயணத்திற்கு வாகனத்தினை முன்பதாகவே புக்செய்து வைக்க விரும்புகின்றீர்களா?

விமான நிலையத்திற்கு / விமான நிலையத்தில் இருந்து வாகனம் தேவையா?

எமக்கு அழையுங்கள்; தொலைபேசி ஊடாகவோ; WhatsApp மூலமாகவோ தொடர்பு கொள்ளவும்.

HOTLINE : 706563213 / 703563213

JRIDE TAXI APP
SPEED IT NET
பரமேஸ்வரா சந்தி,
136, பலாலி வீதி
திருநெல்வேலி, யாழ்ப்பாணம்
+94 703 563213
www.jride.lk

மகிழ்ச்சியான பயணம் திருப்தியான கட்டணம்!

இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல - 08, Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாரா 10.06.2024 ; இல் வெளியிடப்பெற்றது.